பதிவு எண் 2041

KUDI ARASU.

தனிப்பிரதி விலை { உள்நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	...	ரூ 3—0
6 மாத சந்தா ,,	...	ரூ 1-12
வெளிநாட்டிற்கு ,,	...	ரூ 4—0

வாரப்பதிப்பு.

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு, விபவ ௵ ஆனி ௴ 32௳ (15—7—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 12

இந்தியாவுக்கென்றே
தனி முறையில் தயார் செய்யப்பட்ட
ரஸ்டன்—ஹான்ஸ்பி.
'M' கிளாஸ்ல் க்ரூட் ஆயில் இஞ்ஜின்.



சுலபமாய் ஓட்டக்கூடியது, சுலபமாய்ப் பூட்டக்கூடியது,
எண்ணைச் செலவு குறைவு,
6½ முதல் 36 குதிரை ஓட்டம் அளவுவரை
கோயமுத்தூரில் டிலவரி செய்வதற்கு
தயாராயிருக்கின்றது.

MASSEY & Co. LTD.
ENGINEERS

மாசி அண்டு கம்பெனி, Ltd.
இன்ஜினீயர்கள்,
திருச்சி ரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்டு,
கோயமுத்தூர்.

டிடக்டாவ்ஸ்
அல்லது
துப்பு இரகசியம்
அறியும் கருவி.

இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஒரு கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிச் சண்டிப்பாய் வி. பி. யில அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக்
விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும், குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.

தி. பான்ஸி வாட்ச அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

படிக்கப் படிக்க ஆனந்தம்! விகடப் பேச்சின் விநோதம்!!

ஆனந்த விகடன்

மாதப் பத்திரிகையை

ஆவலுடன் எதிர்பார்க்கிறார்!

தமிழ் மாதம் பிறந்துவிட்டால் தமிழ் நாட்டிலே ஆயிரக்கணக்கானவர் "ஆனந்த விகடன்" வருகிறதென்று தபாற்காரனையே எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். "ஆனந்த விகடனை" எப்பொழுது தபால்காரன் கொண்டுவந்து கொடுப்பான், எப்பொழுது அதிலுள்ள விஷயங்களைப் படித்து ஆனந்திப்போம் என்று சதா இதே சிந்தனையாய் "ஆனந்த விகடன்" சந்தாதார்கள் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது சகஜமாயிருக்கிறது. அவர்களுடைய எண்ணம் நிறைவேறுமாறு அன்றைய தினம் தவறாமல் தபால்காரன் "ஆனந்த விகடனை" அவரிடம் கொண்டுவந்து கொடுக்கிறான். அதை அளவிலா ஆனந்தத்துடன் வாங்கி உடனே அதைப் பிரித்துப் படிக்கிறார்; சிரிக்கிறார்; தம் நண்பர்களுக்கெல்லாம் அதைப் படித்து காண்பிக்கிறார். ஊர் முழுவதும் அன்று ஆனந்தமயமாகவே இருக்கிறது. "ஆனந்த விகடனை"ப் படித்தால் நீங்கள் ஆனந்தமாயிருப்பீர்கள். உடனே சந்தாதாரராகச் சேருங்கள். தாமதிக்க வேண்டாம். இவ்வளவு குறைந்த சந்தாவுக்கு இதைவிட ருசிகரமான பத்திரிகையை நீங்கள் வேறெங்கும் காணமுடியாது.

இந்தியா, பர்மா, இலங்கைக்கு வருடசந்தா தபால்கூலி உள்பட ரூ. 1—0—0.
சிங்கப்பூர், பினாங்கு, செட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு முன்பணம் ரூ. 1—4—0.
மாதிரி காபி இனாம்!

'ஆனந்த விகடன்' ஆபீஸ்,
244, தங்கசாலை வீதி, மதராஸ.

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311.

காலரா.

கொடியதும், மிகப் பயங்கரமானதுமான இந்த நோய் உங்கள் ஜில்லாவிலாவது, தாலுக்காவிலாவது, கிராமத்திலாவது பரவுமுன்—நீங்கள் முன் ஜாக்கிரதையாயிருங்கள்! காலராவைத் தடுப்பதற்காயினும் சரி, அல்லது குணப்படுத்துவதற்காயினும் சரி, வைத்ய ரத்ன கோபாலாசார்லு அவர்களின்

கற்பூராதிரிஷ்டம்
&
விஷீசஞ்சீவினிவடி

என்ற மருந்துகளுக்கு இணையானது ஒன்றுமில்லை. ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டியதவசியம்.

விலை செட் 1-க்கு ரூ. 1-2-0.

ஆயுர்வேதாஸ்ரமம்,
151, கோவிந்தப்பநாய்க்கன் வீதி,
தபால் பெட்டி 287, சென்னை.

கணித சோதிடம்

பாகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று மிகவும் சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

கே. ஆறுமுகம் செட்டி,
முகவிபார் பேட்டை, புதுவை

எதிர்கால சோதிடம்.

நீங்கள் பிறந்த நாழிகை அல்லது கடிதம் எழுதும் நேரத்தையாவது குறித்தனுப்பினால் உங்கள் எதிர்கால ஆயுள், தனம், சகோதரம், மாதர், பிதர், ஸந்தானம், சத்ரு, ருணம், களத்திரம், களத்திர ரூபம், பாக்கியம், ஜீவனம், தொழில், லாபம், விரையம் ஆக இத்யாதி விஷயங்கள் பூராவும் தெரிவிக்க ரூ. 2. ஒரு வருஷத்திற்கு மாதவாரி நடக்கும் பலன் எழுத ரூ. 2. பலன் சரியில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.

அருட்பிரகாசர் சோதிடாலயம்,
வைத்திக்குப்பம், புதுவை. (பிரஞ்சிந்தியா).

புதுக்கோட்டை ராஜா கருமாதிக்கும் சங்கராச்சாரிக்கும் சம்பந்த மென்ன?

கைவல்யசாமியார் எழுதுவது.

புதுக்கோட்டை ராஜாங்கத்தை, அச் சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் யாருக்கேனும் கொடுக்கட்டும்; அல்லது அந்த சமஸ்தான பிரஜைகளில் ஒவ்வொருவனுக்கும் பங்கு போட்டுக் கொடுக்கட்டும். அதில் எல்லோருடைய சம்மதத்திலேயே எங்கள் சந்தோஷமும் கலந்திருக்கிறது. அவையனைத்தும் ராஜீய சம்பந்தமுடைய பெரியவர்களின் நிச்சயம்.

ஸ்ரீ சங்கராச்சாரியாரின் ஸ்ரீ முகத்தைப் பற்றியே எங்களுக்கு ஆக்ஷேபனை. அதைப் பற்றி ஜன சமூகம் அநேகம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அதைத்தான் பாப்பானுடைய சாஸ்திரப்புரட்டென்கிறோம்; மோசடியென்கிறோம்; மொற்றென்கிறோம். அதற்கு நாங்கள் சொல்லும் ஞாயம் இந்து சாஸ்திரத்திலிருக்கிறதா? இந்து பெரியவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்களா? மனிதனுடைய அறிவிற்குப் பொருந்துகின்றதா? மனிதனுடைய அறிவின் பொது நோக்குடையவர்களின் கல்வி அறிவின் வாதங்களை ஒத்துக் கொள்ளலாமா? என்பதை நீங்களும் கவனித்துப் பார்க்க வேண்டும்.

"'குடி அரசு'க்குத் தூஷணை புரிவதே தொழில்; அதன் பிரசாரகர்களுக்குப் பார்ப்பனரை தினமும் தூற்றுவதுதான வேலை" யென்று சொல்லுவதோடு நின்று விடாமல், இதற்கென்ன காரணமென்பதையும் சிறிது சிந்தித்துப் பார்த்து, நாங்கள் சொல்லும் காரணம் சரியா தப்பா என்பதையும் கவனியுங்கள். "அப்படியிருந்தாலும் அவ்வளவு சொல்லப்படாது; இப்படியிருந்தாலும் இவை டூமச் (Too much) "என்று சொல்லுகிறவர்கள் எதையாவது ஆலோசித்துப் பார்க்கிறார்களா? தங்கள் பெண்டு பிள்ளைகளுக்குண்டாகும் அழிவைக்கூட எண்ணத்திலெடுக்காமல் அங்கு இறவர்கட்கு கெடியாரத்தின் மணி ஓசை என்ன செய்யும்? இதை விட நாங்கள் அவர்கட்கு என்ன சொல்ல முடியும்? தன்னிலும் மெலிந்தவர்களை அநேக நிர்பந்தத்திற்குள் கொண்டு வந்தும் தன்னிலும் வலியவர்களிடம் இதம் பேசியும் அவர்களின் பாததூளிகளை ஏற்றும் காரியத்தை முடித்துக் கொள்ளும் மனிதனுக்கு ஞாயங்களை உள்ளங்கை நெல்லிக்கனி போல் காட்டினாலும் பலனென்ன? என்று "குடி அரசு" சும்மா இருந்தாலும், வஞ்சனை மோசடி இவைகளையுடைய காரியத்தையோ அதனைச் சன சமூகத்தினுள் நுழைக்கும் ஆசாமிகளையோ குற்றம் சொல்லுவது தூஷணையும் வசைமொழியும் என்று கூக்குரலிடுவதையும் கேட்டு 'குடி அரசு' சும்மாயிருந்து விட்டாலும், தன் மதிப்பும் சிந்தனா சக்தியுமுடைய சன சமூகத்தின் மத்தியில் அது தன் கடமையைச் செய்ததாக எப்படிக் கருதப்படும்,

ஸ்ரீ சங்கராச்சாரியாரின் ஸ்ரீமுகம் வருமாறு.—

"காலம் சென்ற புதுக்கோட்டை ராஜா பிறமதத்தைச் சார்ந்த ஒரு பெண்ணை மணந்து கொண்டாலும், அவ்விதம மணந்த பயனாக பிறந்த புதல்வனை ராஜாவின் வார்சாகக் கருத சாஸ்திரம் இடம் கொடுக்க வில்லை யாதலாலும்; சுருதிகளால் அனுமதிக்கப்பட்ட மணத்தின் பயனாகப் பிறந்த குழந்தையே உண்மை வார்சாக வரமுடியுமாதலாலும், காலஞ் சென்ற ராஜாவிற்கு தற்போதிருக்கும் புத்திரருக்கு ராஜாவின் அபரக்கிரியைகளைச் செய்ய உரிமை இல்லை என்பதோடு தாயாதியான ராமச்சந்திர தொண்டமானே அந்தக் கிரியைகளைச் செய்ய உரிமையுடையவரெனத் தீர்மானிக்கிறோம்" என்பதாம்.

இந்தத்தீர்மானம் செய்வதற்கு இவர் யார்? புதுக்கோட்டை ராஜாங்கத்திற்கும் சங்கராச்சாரிக்கும் சம்பந்தமென்ன? புதுக்கோட்டை ராஜா பூர்வீக தமிழ்க்குடிப் பரம்பரை. அவர் பூர்வீக தமிழ் வழக்கத்தையோ அல்லது சைவ வைணவ மதத்தை அனுசரிக்கிறவராகவோ இருப்பார். பிச்சைக்கு வந்த பார்ப்பானுக்கு சோறு போட்ட பாவமே ஒழிய சுமார்த்த பார்ப்பானுடைய குருவும் வேதாந்த மதாச்சாரியும் புதுக்கோட்டை காரியத்தை நிச்சயம் பண்ண ஆதாரமென்ன? வேள்வி கிரிகைகள் முதலியவைகள் பாப்பானின் ஜீவன உபாயமாக விதிக்கப்பட்டவை என்று ஸ்மிருதி சொல்லுவது போல் பாப்பார்கள் ஆதிக்கம் வகிக்கவும் பிடுங்கித் தின்ன ஏதுவாக்கிக் கொள்ளவும் சமயத்தை உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். பார்ப்பான் படித்த படிப்பெல்லாம் சமயத்தைத் தனக்கு எந்த வழியாலும் அனுகூலப் படுத்திக் கொள்ளவே பழக்கப்பட்டிருக்கிறான். சாஸ்திரங்களும் அதற்கு எவ்வளவு அனுகூலமாக இருக்க வேண்டுமோ அந்த வழியிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் செய்யும் கருமம் தவறாக ஒருஸ்மிருதியிலிருந்தால், இன்னொரு ஸ்மிருதி அதை ஆதரிக்கும்; இன்னொருஸ்மிருதி இரண்டுக்கும் சமாதான ஞாயம் சொல்லும்; அதற்கு மீறி வந்தால் ஒரு ஸ்மிருதி பிராயச்சித்தமும் சொல்லும். இதனாலே தான், எதற்கும்பாப்பான் 'சாஸ்திரம்' என்கிறான். அந்தச் சாஸ்திர மாறுபாட்டிலுள்ள பழக்கத்தினால் சாஸ்திரப் பழக்கமில்லாத நம் கூட்டத்தை ஏமாற்றவும், நம் அடிமை புத்தியின் தொடரவும் ஏதுவாகிறது. அதைப் போலவே இந்த சமயம் ராமச் சந்திரத் தொண்டமான் பாப்பார்கள் பேச்சைக் கேட்டு அவர்களுக்கு ஏராளமான பணத்தை அள்ளிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் வார்சு போய்விடுமென்கிற பயமும் உபதேசமுமிருக்கும். கர்மகாண்டத்தை ஆதாரமாக உடைய மதங்களை ஞான காண்டத்தினால் கண்டித்து விட்டு, உயர்ந்த மதஸ்தர்களாக மதித்துக் கொண்டவர்கள் எங்காவது ஒரு கர்மம் நடப்பதாயிருந்தால் நாங்கள் தான் அதற்கும் அதிகாரிகளென்று சுமார்த்த மதப்பாப்பார்களுக்குப் பிழைப்புண்டாக்குவதே சங்கரமடத்துச் சாஸ்திரிகளின் தொழில் என்பதை தமிழுலகம் என்று அறியுமோ? பாப்பார்களுக்குள் மதத்திற்கு மதம் வித்தியாசமிருக்கும். கொள்கை, சாஸ்திரம், ஏற்பாடு, கர்மம், கடவுள், வணக்கம், முத்தி, மோக்ஷம், இத்தனையிலும் தர்க்கம் தான்; வித்தியாசம் தான். கலியாணம், கருமாந்திரம், கல்லெடுப்பு, இழவெடுப்பு நடக்குமிடங்களில் "அவர் பிராமணாள், இவர் பிராமணாள், நானும் பிராமணன், எல்லாம் பிராமணாள்" என்று சோறும் தட்டும் கண்ட விடத்தில் எல்லாருடைய சாஸ்திரமும் ஒரே சாஸ்திரமாகப் போய்விடும்.

தமிழர்களுடைய அபரக்கிரியைக்கும் சைவ, வைணவ, மதத்திற்கும், புறம்பானது சங்கரர் மதம். புறம்பான மதத்தையுடைய சங்கரர் அபரக்கிரியை செய்ய ஆளைத் தீர்மானம் பண்ணும்பாத்யதை கொண்டாடுகையில், இவர் மதத்தைப் போலவே ஒரு அந்நிய மதப் பெண்ணிடம் தனக்கே பிறந்த குழந்தை அபரக்கிரியை செய்ய பாத்யதை இல்லை என்று இவர் எப்படிச் சொல்லலாம்?

ஆயிரக்கணக்கானவர்கள் இந்து மதத்திலிருந்து அன்னிய மதத்திற்குப்போகிறார்கள்; அனேக லட்சம் இந்துக்கள் பசியால், நோயால், அழிகிறார்கள். அனேகம் பாப்பார்கள் இந்து சாஸ்திரத்திற்கு விரோதமான செய்கைகளால் இந்து மதத்தின் யோக்கியதையைக் கெடுக்கிறார்கள்; ஊரில் கொள்ளையடித்த மடத்துச்சொத்துக்களெல்லாம் பஞ்சமகா பாதகத்தின் வழியேசெலவழிக்கப் படுகிறது. அதிலொன்றும் சங்கருடைய ஸ்ரீ முகத்தைக் காணோம். பொதுப் பள்ளிக்கூடமில்லை; அனாதைப் பிள்ளைகளுக்கு ஆதரவு கிடையாது; பிணியால் வருந்துபவருக்கு தர்ம வைத்திய சாலைகள் கிடையாது; ஏழைமக்கள் அந்நிய நாட்டில் கஷ்டப்படாமல் பிழைக்க ஒரு தொழிற்சாலையாவது கிடையாது; மத உபதேசம் அவர் அடுக்களையில் மட்டுந்தான்; இதற்கெல்லாம் லோககுரு வென்னும் பாத்தியதை தீர்மானம் காணுவதேயில்லை. கர்மாந்திரம், கல்லெடுப்பு இவைகளில் பாப்பான் வயிறு நிறையவேண்டுமானால் ஸ்ரீமுகம் விடுவது மட்டும் தவறுவதில்லை.

சமயம் கிடைத்தவிடத்தில் நுழைந்து, தனக்கு லாபத்தை உண்டுபண்ணிக் கொள்ளவேண்டுமென்கிற பார்ப்பானின் தந்திரமே ஒழிய ஸ்ரீமுகம் எதிலாவது பொருந்துமா? சங்கரர் நம்பூதரிப் பாப்பான். அவர்நாட்டில், அவர் கூட்டத்தில், அவர் வீட்டில் அபரக் கிரியை இந்நாட்டுத் தமிழ் வழக்கத்திற்கும் சுமார்த்த, சைவ, வைணவ சமூகத்திற்கும் நேர் மாறுபாடானதாகும். மலையாளத்தில் பெரும்பாலும் தகப்பனுக்கோ, பங்காளிகளுக்கோ, கர்மம் செய்வதில்லை. தாய்க்கும், மாமன்மார்களுக்குந்தான் செய்வார்கள். திருவனந்தபுரம் ராஜா, கொச்சி ராஜா, பல குட்டி ராஜாக்கள், ஜெம்மிகள் இவர்களெல்லாம்நம்பூதரிப்பார்ப்பானின் பிள்ளைகள். பார்ப்பானுக்குக் கருமாதி செய்தால் பாப்பானும் அவனுக்குப் பிறந்த பிள்ளையும் ஜாதி ஒன்றாகிவிடுமென்று பார்ப்பார் நினைத்து அங்கு மாமன் மாருக்கு மருமகன் செய்வதுதான் சாஸ்திரமென்று சொல்லித் தங்கள் குடும்பப் பணம் பிரியாமலிருக்கவும், இஷ்டமான பெண்களை அனுபவிக்கவும், மருமக்கத் தாயமென்றும் ஏற்படுத்தினார்கள். மாமனுடைய தகப்பன் நம் பூதரிப் பாப்பானாகவோ இந்த தேசத்துப் பாப்பானாகவோ இருக்கலாம். மருமகனுடைய தகப்பன் நாயர் ஜாதியாகவேஇருக்கலாம். தகப்பனுக்கு அங்கு கருமாந்திரமில்லை. தாய்க்கே. சங்காராச்சாரியின்ஜாதியில் முதல்பிள்ளைக்குத்தான்கலியாணம்; மற்றவர்களெல்லாம்நாயர்பெண்களைச் சம்பந்தமென்னும் கலியாணம் செய்துகொள்ளுவார்கள். இவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் இவர்களுக்கு கர்மம் செய்யாது. இவர்களுக்குக்கர்மம் செய்வது யார் என்பது இன்னும் நிச்சயமாகவில்லை. இந்த ஏற்பாட்டிற்கும் இந்து ஸ்மிருதிகள்தான் பிரமாணம். இதற்கும் மந்திரம் சொல்லி கருமாந்திரம் பாப்பானே செய்கிறான். அங்கு சங்கரரின் ஸ்ரீமுகம் போகாது போனால் பார்ப்பானின் லாபங்களெல்லாம் போய்விடும். சங்காச்சாரி ஊரில் நம் பூதரிப் பார்ப்பானை அவர் ஜாதிக்குப் பிறக்கும் பிள்ளைகள் ராஜ்யமாளலாம். அதுவும் இந்து சாஸ்திரம்தான்.

சீமையில் புதுக்கோட்டை ராஜாவிற்குக் கருமாதி சே. எஸ். வெங்கிடாசல அய்யரும் சுந்தர அய்யரும் புரோகிதர்களாகவிருந்து ராஜாவின் ஆஸ்திரேலிய மனைவியின் புதல்வர் சிட்னிமார்த்தாண்டருக்கு பூணூல் போட்டு அவரால் நடத்தினார்களாம். அதை முன்னிட்டு புதுக்கோட்டையில் பிராமணர்களுக்கு பூரி தெட்சணை கொடுத்தார்கள் என்று பத்திரிகைகளிலும் படித்தோம். இது எந்த இந்து சாஸ்திரம்? பூரி தெட்சணை வாங்கிக்கொள்ளும் சாஸ்திரமா? இப்பொழுது சங்காராச்சாரி

இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

பிறனில்விழையாமையும் திருவள்ளுவரும்.

கட்டுரை 16

(சாமி சிதம்பரனார் எழுதுவது)

பிறன் இல் விழையாமை என்பது வேற்றோன் மனைவியைக் கெட்ட எண்ணத்துடன் விரும்பாமலிருத்தலாகும். பிறனில் விழையாமை என்னும் இவ்வதிகாரத்தால் ஆண் மக்களும் கற்புடையவராயிருக்க வேண்டும் என்னும் செய்தியைத் திருவள்ளுவர் மிகவும் வற்புறுத்திக் கூறுகின்றார். கற்புடைமையென்பது பெண்மக்களுக்குத்தான் உரியதென்று சிலர் கொள்வது தவறென்பதைக் இக்கட்டுரையால் அறியலாம். பொதுவாக உலக இயற்கையில் இப்பொழுது கற்புடைமை பெண் மக்களுக்குத்தான் உரித்தானதெனக்கருதிக் கொண்டு பல ஆண் மக்கள் தூர்த்தர்களாகவே திரிந்துகொண்டிருக்கின்றனர். ஒரு பெண் பிற ஆடவனொருவனைக் காதலிக்கின்றாள் என்ற செய்தியை ஆண்மக்களோ அன்றிப்பெண்மக்களோ அறிந்து விட்டால் அப்பெண்ணை மிகவும் இழிவாகவும் [illegible] பேசுகின்றனர். வேசியென்றும், விபசாரியென்றும், கற்பழிந்தவளென்றும், குச்சுக்காரியென்றும், பழிச்சொற் கூறுகின்றனர். ஆனால் ஆண் மக்கள் எத்தனைப் பிறபெண்களைக் காதலிப்பினும், அவர்களைச்சேர்ந்து வாழ்ந்தாலும் அவர்களை அவ்வளவாக ஒருவரும் தூற்றுவதில்லை, ஆண்மக்கள் அவ்வாறு செய்வதனால் குற்றமில்லையென்று நினைக்கின்றனர். அது ஆண் மக்களுக்கு இயற்கையென்றெண்ணுகின்றனர். இது இக்காலத்து வழக்கமாக இருக்கின்றது. ஆனால் பண்டைக் காலத்தில், அதாவது திருவள்ளுவர் காலத்தில் ஆண் மக்கள் பிற பெண்களைக் காதலிப்பினும், பெண் மக்களைப்போலவே அவர்களும் இழிவாக கருதப்பட்டுவந்தனர் என்று அறிகின்றோம். இதனைக் குறளிலிருந்து அறிந்து கொள்ளுவோம்.

ஒருவனுக்கு எல்லாவற்றிலும் சிறந்த பொருள் மனையாளென்பதை முன்னரே "இல்லாளும் திருவள்ளுவரும்" என்ற கட்டுரையாலறிந்திருக்கலாம். அவ்வாறு மற்றவனுக்கு உரிமைப்பொருளாகிய மனையாளை, தான் இச்சிப்பது ஒரு பெரிய அறிவீனமாகும். தன்னுடைய பொருளைப் பிறன்கைக்கொள்ள நினைக்கும்போது, அவ்வாறு நினைப்பவன்மீது தனக்கு எவ்வளவு கோபமுண்டாகுமென்பதைச் சிறிது சிந்தித்துப்பார்த்தால் யார்தான் பிறர் பொருளைக் காதலிக்க முற்படுவர்? அறத்தின் [illegible]யும், பொருளின் இயல்பையும் அறிந்தவர்களிடம் பிறன்மனையைக் காதலிக்கும் குணம் ஒரு காலத்திலும் உண்டாகாதென்பது உறுதி. பிறன் மனையை காதலிப்பவர் [illegible] அறமும், பொருளும் ஒரு சிறிதும் தங்கியிராதென்பதும் உறுதியாகும். இதனை (1) "பிறனுக்கு உரிமைப்பொருளாயுள்ள ஒரு பெண்ணின் இன்பத்தை [illegible] விரும்பி நடக்கும் அறியாமை அறத்தின் தன்மையையும் பொருளின் தன்மையையும் ஆராய்ந்து உணர்ந்தவர்களிடம் உண்டாகாது" என்ற திருவள்ளுவர் [illegible] அறியலாம்.

நன்மைகளிலும் பலவகையுண்டு; தீமைகளிலும் பலவகையுண்டு. [illegible] நன்மைகள் பல; சிறு [illegible] நன்மைகள் பல; [illegible] தீமைகள் பல. மிகுந்த நன்மையைத் தரும் செயல்களைப் பெரு நன்மையென்று கூறலாம்; சிறு நன்மையைத் தரும் செயல்களைச் சிறு நன்மையென்று கூறலாம். பெருங் கெடுதியைத் தரும் செயல்களைப் பெருந்தீமைகளென்று கூறலாம்; சிறு கெடுதிகளையுண்டாக்கும் செயல்களைச் சிறு தீமைகளென்று கூறலாம். அறமல்லாத செயல்களெல்லாவற்றையுந் தீய செயல்களென்றும், பாவ வினைகளென்றும் கூறுவார்கள். அறமல்லாத செய்கைகளிலும் மிகுந்த தீமையான செயல் பிறன் மனையை விரும்புஞ் செயலாகும். பிறன் மனையை விரும்புகின்றவர்கள் அறிவில்லாதவர்களில் முதன்மையாக எண்ணப்படும் அறிவில்லாதவராவார்கள். இதனை (2) அறமல்லாத செயல்களைச் செய்து கொண்டிருப்பவர்களில் பிறன் மனைவியை விரும்புகின்றவர்களைப் போல அறிவற்றவர்கள் வேறொருவருமில்லை" என்னும் திருக்குறளால் அறியலாம்.

கள்ளமற்ற உள்ளமுடைய பெண்களைச் சில பாவிகள் கெடுப்பதற்கு வழி தேடுவார்கள். அப்பெண்களுடன் மிகவும் நெருங்கி, அன்போடு அண்ணன் தம்பிபோலப் பழகிக்கொண்டிருந்து அவர்களைத் தம்மை நம்புமாறு செய்துகொள்வார்கள், வஞ்சகமற்ற அப்பேதைப் பெண்களும் அவர்களை நம்பிக்கொண்டு பழகியிருப்பார்கள். அவர்களுடைய கணவர்களும் இவர்களையால் ஐயுறமாட்டார்கள். அத்தகைய பெண்களைக் கெடுப்பதற்கு விரும்புகின்றவர் இயற்கையிலேயே உயிரோடிருப்பினும் இறந்தவர்களென்று தான் கருதப்படுவார்கள். இதனை (3) "தம்மை நம்பினவர்களின் மனைவியர்பால் தீமை செய்வதைவிரும்பி நடக்கின்றவர்கள் இறந்தவர்களேயன்றி வேறாகமாட்டார்கள்" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

பொருள் வலிமை, துணை வலிமை, தோள் வலிமை முதலிய எத்தனை பெருஞ் செல்வங்களிருந்தாலும், அவைகளெல்லாம் பிறன் மனையை விரும்புகின்றவனுக்கு ஒரு துணையும் செய்யாதாம். இதனை (4) "தினையளவும் ஆராயாமல் பிறன் மனையாளை விரும்புகின்றவன் எத்துணை வலிமையுடையவனாயிருப்பினும் என்ன பயன்?" என்னும் திருக்குறளால் உணரலாம்.

பிறன் மனையாளை விரும்புகின்றவன், முதலில் "ஆசை வெட்கமறியாது" என்பதுபோல எளிதாக இன்பத்தை நுகரலாமெனக்கருதிப் பிறன் மனையாளிடஞ் சென்று தனது ஆவலை வெளிப்படுத்தலாமெனக்கருதுவதும் உண்டு: ஆனால் அது அறியாமையின் கூற்றேயாகும். அவ்வாறு செய்வதனால் உண்டாகும், மானக்கேட்டையும் பெரும்பழியையும், சிறிது சிந்தித்துப்பார்ப்பானாயின் அவன் அச்செயலையாற்றத் துணிய மாட்டான். அவற்றையெல்லாம் ஆராயாமல் பிறன் மனையை விரும்புகின்றவனை விட்டு எப்பொழுதும் பழிச்சொல் அகலாமல் நிற்பது உண்மையாகும். இதனை (5) "[illegible] எளிதென்று நினைத்து பிறன் மனையாளை விரும்புகின்றவன் எப்பொழுதும் அழியாது நிலைத்து [illegible] கூடிய பழியை அடைவான்" என்னும் திருக்குறளால் அறியலாம்.

பிறன் மனையாளை இச்சிக்கின்றவனுக்குப் பகைஞர் [illegible] உண்டாவார்கள். தான் இச்சிக்கின்ற பெண்ணின் [illegible] [illegible] [illegible]. அன்றியும், [illegible] [illegible] [illegible]. மற்றும் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] புணராகும், ஆதலால் பிறர் அறியாமல் தமது காரியத்தை நிறைவேற்றவேண்டும் என்ற எண்ணத்தினால் எப்பொழுதும் அவர்கள் மனத்தில் அச்சம் குடிகொண்டிருக்கும். இத்தகாத காரியத்தை யாற்றுவதினால் பலரும் தன்னைப் பழித்துக்கூறுவார்கள். அதனால் பழியும் தன்னைவிட்டு நீங்காது. இதனை (6) "பிறன் மனைவியை விரும்புகின்றவனிடத்தில் பிறர் பகையும், பாவமும், அச்சமும், பழியும் ஆகிய நான்கும் எப்பொழுதும் நீங்காமலிருக்கும்" என்னுந் திருக்குறளாலறியலாம்.

இல்வாழ்கின்றவனுக் கிருக்கவேண்டிய முன்மையான குணங்களில் பிறன் மனையாளை விரும்பாமலிருத்தலு மொன்றாகும். அவ்வாறிருக்கின்றவன்தான் இல்லற தருமத்தைச் சரியாக நடத்திக் காட்டுபவனாவான். இதனை (6) "அறமுறைப்படி இல்வாழ்வானென்று சொல்லப் படுபவன் பிறனுக்குரிமையான பெண்ணின் இன்பத்தை விரும்பாதவனாயிருப்பான்" என்னுங் குறளாலுணரலாம்.

ஒருவன் பலவகையிலும் தனது ஆண்மையைக் காட்ட முடியுமாயினும், பிறன் மனையை விரும்பாமலிருக்கும் வகையிற் காட்டும் ஆண்மையே சிறந்த ஆண்மையாகும். அதுவே பேராண்மையென்று கொள்ளப்படும். ஆதலால் யாவரும் பேராண்மை யுடையவராயிருக்கப் பழக வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். அதனோடு அது சிறப்பு நல்லொழுக்கமு மாகும். இதனை (8) "பிறன் மனைவியின்மீது காதல் கொள்ளாத பெரிய வீரம் சிறந்த அறமாகும். அதுமட்டுமின்றி நிரம்பிய ஒழுக்கமும் ஆகும்" என்னுங் குறளாலுணரலாம்.

பிறன் மனையை விரும்புவார்க்கு ஒரு நன்மையும் உண்டாகாது; அவர்க்கு எப்பொழுதும் தீமைதான் விளைந்துகொண்டிருக்கும். பிறன் மனையை விரும்பாதவர்களுக்கு எப்பொழுதும் நன்மையே விளைந்துகொண்டிருக்கும்; அவர்கள் தான் நன்மைக்கு உரியவர்களாயிருப்பார்கள். இதனை (9) "நன்மைகளை அடைவதற்குரியவர் யாவரென்னின் பிறர்க்குரிய பெண்களின் தோளைத்தழுவாதவர்களே" என்னுங்குறளாலறியலாம்.

ஒருவன் அறங்களைச் செய்யாதவனாயினும் பிறனுடைய மனைவியை விரும்பாமலிருப்பானாயின் அதுவே மிகவும் நன்மையாகும். இதனை (10) "அறத்தைத்தனக்குரிமையாகக் கொள்ளாமற் பாவங்களைச் செய்வானாயினும், பிறனுக்கு உரிமையான பெண்ணின் இன்பத்தை விரும்பாமலிருப்பது நன்மையாகும்" என்னுங் குறளால் அறியலாம்.

இதுகாறுங் கூறியவாற்றால் பிறன் மனைபுகுதலால் வரும் தீமையை நன்குணரலாம்.

அசல் வெள்ளி நகைகளை வாங்குங்கள்.

அசல் வெள்ளியினால், தயார்செய்த அரு[illegible] [illegible] கொலுசுகளில் [illegible] [illegible], முத்து [illegible], பட்டைப[illegible] [illegible], [illegible], காப்பு, [illegible] [illegible], [illegible], அருப்பு [illegible] [illegible], [illegible], [illegible], [illegible], [illegible], வெள்ளி நகை[illegible] [illegible] [illegible] [illegible] வியாபாரித்து [illegible]

S. K. மாணிக்கம் செட்டி,

தங்கம், வைரம், வெள்ளி

நகைகள் வியாபாரம்,

செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மதம்.

2-ம் கட்டுரை.

ஸ்ரீமதி தர்மு அம்மாள் எழுதுவது.

நம்மில் அநேகர் முதியோராகிய தம் தாய் தந்தைகளை அவர்கள் ஜீவிய காலத்தில் அலக்ஷியம் செய்து, அவர்களை சுத்தமாய்க் கவனியாமல் விட்டிருந்த போதிலும், அவர்கள் இறந்த பிறகு கருமம் முதலிய சடங்குகள் யாதொரு குறைவுமின்றி நடத்தி, திதியை வருஷந்தோறும் சிறப்பாய் செய்து வருவதை அநேக இடங்களில் நாம் சாதாரணமாய் காண்கிறோம். அவ்விதம் காண்கிற பலரில் என்போலியர் மேற்படியார்கள் நடத்தும் சடங்குகளைப் பார்த்து ஆச்சரியமுற்று "இவர்கள் தாய் தகப்பன் உயிருடனிருக்கும் போது வயிற்றுச் சோற்றுக்கே சரியான கவனிப்பில்லாமல் அவஸ்தைப்பட்டு இறந்திருக்கிறார்கள்; அப்படியிருந்தும் சிரார்த்தாதிகள் செய்வதில் யாதொரு குறைவுமின்றி எவ்வளவோ சிறப்பாய் செய்து வருகிறார்களே. இது யாருடைய நன்மைக்கு" என்று எவ்வளவு தூரம் யோசித்துப் பார்த்தபோதிலும் என் சிற்றறிவிற்கு கொஞ்சமும் புலப்படவில்லை. அதாவது இவ்வித ஆடம்பரங்கள் இறந்தவர்கள் நன்மைக்கா? அல்லது இருந்து நடத்துகிறவர்கள் பெருமைக்கா? அதைப் புசித்து இவர்கள் முன்னோர்களை கரையேற்ற வந்திருப்பவர்கள் பிழைப்பிற்கா? அப்படியே இருந்த போதிலும், இவர்களுடைய பிதுர்க்கள் எங்கிருந்து இவைகளை அங்கீகரிக்கின்றன வென்பதையும் உணராமல், பழமை என்னும் பாழுங் கிணற்றிலே விழுகிறார்கள் விசாரணை என்பதையே யிழந்து அறியாமைக்கு அடிமைப்படுகிறார்கள்.

கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு சொன்னதாகச் சொல்லும் கீதையில் ஒரு மனிதனுடைய ஆத்மா பிரியுங் காலத்தில் மற்றொரு தேகத்தைப் பற்றிய பிறகே தான் ஏற்கனவே இருந்த இடத்தை விடுகிறதென்று கூறப்பட்டிருக்கிறது. அவ்விதமிருக்க, கீதையை மூத்திக்குப்பாதையென்று நம்பும் இந்துக்கள் உத்திர கிரியைகள், திதி, மாசியம் முதலிய சடங்குகள் செய்வது எதற்கென்பதும் யாருக்கென்பதும் விளங்கவில்லை.

இது நிற்க, பசி, தாகம் முதலியவை தேகத்திற்கா? ஆத்மாவிற்கா? இவர்கள் ஆத்மாவென்று சொல்லும் பிராணவாயு தேகத்தை விட்டு நீங்கினால், சரீரம் உணர்ச்சியற்ற கட்டையாய் விடுகிறது, ஆத்மாவாகிய பிராண வாயு காற்றோடு காற்றாய் கலந்து விடுகிறது. இப்படி யிருக்க ஸ்தூல சரீரத்தைத் தவிர வேறு சில சரீரங்கள் இருக்கிறதென்று 'சாஸ்திரங்களில்' சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது சூட்சும சரீரம், காரண சரீரம், துரியம், துரியாதீதமென அநேக சரீரங்களிருப்பதாய் சொல்லப் பட்டிருந்த போதிலும், ஸ்தூலத்திற்கடுத்த சூட்சும சரீர மொன்றையே விசாரிக்கப் புகின் நிரூபிப்பது அசாத்தியம். ஸ்ருதி, யுக்தி, அனுபவமென்னும் மூன்றுவித பிரமாணத்தில் ஸ்ருதியில் சொல்லி யிருப்பதைத் தவிர, யுக்தி, அனுபவமென்னும் மற்ற இரண்டிற்கும் எவ்வித சமாதான மிருக்கிறதோ தெரியவில்லை. மேற்கண்ட மூன்று வித பரீக்ஷைக்கும் நின்றாலல்லது மனது நம்புவது அசாத்தியம். அது எங்ஙனமெனில், நெருப்பு சுடுமென்று ஸ்ருதியில் சொல்லியிருக்கிறது. அது சரியாவென்று நம்புவதற்கு யுக்தியால் ஒரு துரும்பை எடுத்து நெருப்பில் போட்டால் நெருப்பு அதை எரித்து விடுகிறது. அத்துடன் ஆறுதலடையாமல் அனுபவத்தால் பரீக்ஷிக்க நினைத்து தன் கையை நெருப்பிற்கு சமீபத்தில் கொண்டுபோய் பார்த்து, சுட்டதின் பேரிலோ, சுடுமென்ற நிச்சயத்தின் பேரிலோ, மானிட வகுப்பினராகிய நாம், நமக்கு அனுபவமில்லாத புதிய விஷயங்களை பரீக்ஷித்துப் பார்த்து நம்பவேண்டியிருக்கிறதே யல்லாது, இம்மூன்று விஷயங்களில் யுக்தி, அனுபவ மில்லாதவரையில் சுருதியை நம்புவதற்கிடமில்லை.

ஏற்கனவே சொன்ன சூக்ஷ்ம சரீர வியாபகம் எவ்விதமென விசாரிக்கப் புகின் அநேகமாய் சொப்பனமே அதற்கு போதுமான ருஜு வென்கிறார்கள். அதாவது உதாரணமாக, இராமன், கிருஷ்ணனென்ற இருவர் சொப்பனத்தில் ஒருவரை யொருவர் சந்தித்து ஏதோ சில விஷயங்களை பேசினதாக இராமன் கனவு கண்டானென்று வைத்துக் கொள்வோம். அதுதான் இராமனுடைய சூக்ஷ்ம சரீரச் செய்கை யென்று வைத்துக் கொண்டால், அதே விதமாக எவ்வளவோ தூரத்திலிருக்கும், கிருஷ்ணனுடைய சூக்ஷ்ம சரீரமும் இவன் பேசினவைகளை யுணர்ந்து கனவுகண்டிருந்தால்தான், சூக்ஷ்ம சரீரத்தை ஒப்புக்கொள்ள இடமுண்டு. அவ்விதமில்லாமல், இருவர்களுடைய சூக்ஷ்ம சரீரம் சந்தித்திருக்க ஒருவனுக்கு மட்டும் மேற்படி விஷயங்கள் புலனாகிறதெயல்லது மற்றவனுக்கு ஒன்றுமே தெரியாததினால் இது சூக்ஷ்ம சரீரவியாபகமாகுமா? மனிதனுக்கு நல்ல தூக்கமில்லாமல், மனது பலவித தொந்திரவுக்காளாகி இருக்குங்காலத்தில் பித்தமதிகரித்து கனவு காண்பது சூக்ஷ்ம சரீரமென்று நிர்ணயிப்பது விசாரணைக் குறை வென்றே நினைக்க இடமிருக்கிறது. ஸ்தூலத்திற்கடுத்தபடியாகிய சூக்ஷ்மமே விசாரணைக்கு நிற்கவில்லை என்றால் மற்ற சரீரங்களைப்பற்றி நாம் கவனிப்பது மிகையாகும்.

வெளியிலிருக்கும் பிராண வாயுவை தன்னுள்ளிருக்கும் கருவியால் இழுத்து உஸ்வாஸநிஸ்வாஸமென்ற செய்கை புரிவதே உயிர் பெற்றிருப்பதற்கு அடையாளம். அதை விட்டு உள்ளிருக்கும் கருவி ஏதோ காரணத்தால், அதன் சக்தியை இழந்து விட்டால் வெளியிலிருக்கும் காற்று வெளியிலே நின்று விடுகிறது. இதே மரணம். இதைத் தவிர நம்ம தேகத்தில், ஆத்மா ஒன்று குடி புகுந்திருப்பதாயும், அது வெளியேறி விட்டால் மரணமென்பதாயும் சொல்லுகிறார்கள். தூரதிருஷ்டி கண்ணாடிக்குக் கூட புலப்படாத அந்த ஆத்மா, இதுவரை ஒருவராலும் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தும் அதற்கு அநேகம் செயல்களிருப்பதாயும், இத்தஸ்தூலத்தைத்தவிர அநேக சரீரங்களிருப்பதாயும், மேற்படி ஆத்மா இந்த ஜென்மத்தில் செய்த புண்ணிய பாவத்திற்குத் தக்கபடி மறு ஜென்மமடைகிற தென்றும், 'ஆகாமியம்' 'சஞ்சிதம்' 'பிராரப்த' மென்னும் மூன்றுவித கர்மாக்களை அனுபவிப்பதாயும், இன்னும் எண்ணிறந்த ஆபாச கல்பனைகள் கட்டி விட்டு நெடுங்காலமாய் அவ்வித கொள்கைகளை நம்பி வந்திருக்கிறார்கள்.

இதோடில்லாமல் மனிதன் "நமக்குவரும் இடையூறுகளை கடவுளை பிரார்த்தித்து அவருக்கு பூசை நைவேதனம் அபிஷேகம் முதலியவைகளில் எண்ணிறந்த பொருளை செலவு செய்து வந்தன வழிபாடுகளால் அவரை நம் வசம் திருப்பி நம் கோறிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்" என்று சொல்லுகிறார்கள். அவ்விதம் நம்பி செய்கிறவர்களுக்கு "காக்கையேற பனம் பழம் விழுந்தது" என்பது போல் ஒரு சம்பவம் அவர்களிஷ்டப்படி நிறைவேறுகிறதே யல்லது நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது தவறி விடுகிறது. அதற்கு காரணம் "கருமாவை யனுபவித்தே தீரவேண்டும். கடவுள் என்ன செய்வார்!" என்ற சர்வ சாதாரணமாக பண்டித பாமரரும் சொல்லிக் கொள்வதை நாம் நிதர்சனமாய் பார்த்தும் கேட்டும் வருகிறோம்.

கடவுளாலும் நிவர்த்தி செய்யக்கூடாதது கர்மா என்பர். இதை ஒப்புக் கொள்ளு

திருச்சி-ஆலயப்பிரவேச வழக்கு.

திரு. ஜே. என். ராமநாதனவர்களால் திருச்சி மலைக்கோட்டை கோவில் அதிகாரிகளின் பேரிலும் மற்றும் சிலர் பேரிலும் தொடுக்கப்பட்ட வழக்கு 4 ந்தேதியன்று விசாரணைக்கு திருச்சி டவுன் சப்மாஜிஸ்ட்ரேட் அவர்கள் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் எட்டு சாட்சிகள் ஆஜராயிருந்தனர். வாதிக்கும் எதிரிகளுக்கும் சம்மன் சேர்ப்பிக்கப்படவில்லையாதலால் அவர்களில் ஒருவரும் வரவில்லை. ஆகலால் வழக்கு ஜூலை 19 ந் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

பார்ப்பனீயம் ஒழிந்த திருமணம்.

திருவாளர் அருணாசலம் பிள்ளைக்கு விபவ வருஷம் ஆனிமாதம் 11 தே ஞாயிற்றுக்கிழமை பார்ப்பனரை நீக்கி தரங்கன்பாடி விநாயகர்பாளையத்தில் மணமகன் கிருகத்தில் விவாகம் சிறப்பாக நடந்தேறியது.

ஆர். ஆர், மாணிக்கம், திருவாலூர்.

சுயமரியாதைத் திருமணம்.

திருநெல்வேலி ஜில்லா விஜய நாராயணம் ஸ்ரீமான் ப. சி. சுப்பையா அவர்களின் குமாரன் சாமிவேதக்கும் திரு. சொ. மா. ஞானமுத்து அவர்களின் திருச்செல்வி சீட்பிராள் அம்மாளுக்கும் விபவ ௵ ஆனி ௴ 15௳ வியாழக் கிழமை இனமித்திரர்களுடன் சுயமரியாதைச் சடங்குகளுடன் திருமணம் நடத்தப்பட்டது.

எஸ். எம். சாமுவேல்.

கிறவர்கள் தெய்வத்தினிடம் முறையிடுவது அனாவஸ்யம். அப்பர், சுந்திரர், மாணிக்காவாசகர்களிடத்தில் எவ்வளவோ அன்பு வைத்து மனிதன் கூட செய்ய ஒப்புக் கொள்ளாத இழிவான குற்றேவல் "கடவுள்கள்" செய்திருப்பதாக புராணங்களில் சொல்லப்பட்டிருப்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. கடவுள் சுந்திரமூர்த்திக்கும் மற்றவருக்கும் "ஆகாமிய சஞ்சிதத்தை விலக்கி விடுகிறேன். பிராரப்தத்தை நீங்களனுபவித்தே தீரவேண்டும்" என்று சொன்னதாக புராணங்கள் முறையிடுகின்றன. இவைகளை யோஜிக்குங்கால், சர்வவல்லமையுள்ள கடவுளென்று சொல்வது தவறென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. ஏனெனில், அநேகம் விஷயங்களை அவரால் நிவர்த்தி செய்ய சாத்தியமில்லாதிருக்கிற தென்று தெளிவாய் விளங்குகிறது.

இம்மட்டோ! "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்ற வாக்கை யோஜித்தால் மனிதன் செய்யும் நற்செயல்கள், தீச்செயல்கள், இவன் செய்ததாக அங்கீகரிப்பது எங்ஙனம்? கடவுளுக்கு தினந்தோறும் மூன்று கால பூஜையும், இரவில் பள்ளியறை முதலிய தினசரி கட்டளைகளும், உத்ஸவாதிகளும் செய்து மேற்படி கடவுளுக்கு அபாரமான சக்தியிருப்பதாய் நினைத்து அநேகர் வணங்கி வருவதை நாம் பிரத்தியக்ஷமாய் காண்கிறோம். யோஜிக்குமிடத்து தவர் தன்னைத்தான் காத்துக் கொள்ளவே முடியாமல் தன் திருவாபரணங்களையும் இன்னும் அநேகமான வரும்படிகளையும் பிறர் எடுத்துக் கொண்டு மோசஞ் செய்து விடுவதால் இவர் செயலற்றவராகவே கருதவேண்டியிருக்கிறது. இம்மட்டோ! அவருக்கு அநேகவிதமான நாமதேயமிருக்கிறது. அது ஒவ்வொன்றையும் யோஜித்தால் பலவிஷயம் தெளிவாய் விளங்கும். அவர் மனோவாக்குக் கெட்டாதவர்; காட்சிக்கன்னியர்; என்ற பெயர்களே நமக்குப்போதுமானது. அதாவது யாராலும் காணற்கரிது, மறறும் கண்டதேயில்லை. இவ்விதம் பரம்பொருள் நமக்கு காட்சி கொடுப்பாரென்று நினைப்பது என்னே விந்தை!

ஜாதிக் கர்வம்கொண்ட பார்ப்பனருக்குத்தக்க மரியாதை.

பிரஞ்சு இந்தியாவிலிருந்து

திரு. கே. சதாசிவம்பிள்ளை எழுதுவது.

ஸ்ரீமான் நாயக்கரவர்கள் நடத்தி வரும் "குடி அரசு" பத்திரிகையையும் அவர் கோரிக்கையையும் இன்னும் மற்றோர்கள் நடத்திவரும் பத்திரிக்கைகளையும் அவரவர்களின் கோரிக்கைகளையும் வாசித்தும் கவனித்தும் வருகிறோம்.

ஆனால், ஸ்ரீமான் நாயக்கரவர்கள் நடத்திவரும் பிரசாரமே எம்மதத்தினருக்கும் சம்மதமுடைய தர்ம வழி என்று சொல்லலாம். ஏனென்றால் அது எல்லோரும் சுதந்திரத்துடனிருக்கவேண்டுமெனறும், எல்லோரும் சமமாக இருக்கவேண்டுமென்றும், எல்லோரும் சம உரிமையுடன் சுகிக்கவேண்டுமென்றம், ஜாதிச்செர்வம், ஜாதி உரிமை கூடாதென்றும், ஜாதிப் பிரிவினையினால் தான் இந்தியா இவ்வளவு எழ்மை நிலைமைக்கு வந்ததற்கு காரணமென்றும், அவன் பெரிய ஜாதி, இவன் சின்னஜாதி, அவனைத் தீண்டக் கூடாது, இவனைப் பார்க்கக் கூடாது என்ற வித்தியாசமிருக்கக்கூடாது என்றும் பல புனிதமான கொள்கைகளைக் கொண்டதாயிருக்கிறது. இவ்வியக்கத்தைக் கண்டு பொறாமைக்குணமுடையவர்கள் சுயநலக்காரர்கள், எதிரிவாழ மனம் சகியாதவர்கள், கல்நெஞ்சமுடையவர்கள், ஜாதி கொர்வம் படைத்தவர்கள், "எங்கே தாழ்ந்த ஜாதிக்காரர்கள் நம்முடன் சரி சமமாக வந்துவிடப்போகிறார்களோ" என்ற கெட்ட எண்ணம் படைத்தவர்கள் "எங்கே நம்ம பிழைப்பிற்கு சேடு வந்துவிடப்போகிறதோ" என்று எண்ணுபவர்கள் நாம் இதுகால பரியந்தமாக சாதிக்கென்றும், மோக்ஷத்திற்கு நேரே அனுப்பிவிடுகிறோமென்றும், எங்களுக்குத்தானம் கொடுத்தால்தான் சொர்க்கவாசல் கதவைத் திறப்போம் என்றும் சொல்லி ஏமாற்றிப்பிழைத்துவந்த பிழைப்பின் வாயில் மண்விழுந்து விடப்போகிறதோ" என்று எண்ணும் சுயநலமிகள் அல்லது அறிவீனர்கள் தான் இதற்கு எதிரிடையாகப் பேசுவார்கள். நாயக்கர் பிரசாரம் கூடாதென்பார்கள். ஸ்ரீமான் நாயக்கர் நாஸ்திகரென்றும் சொல்லுவார்கள்.

ஆனால் பக்ஷபாதமற்றவர்கள், தம்மைப்போல் எதிரியும் வாழவேண்டுமென்று எண்ணுபவர்கள், ஜீவகாருண்யமுடையவர்கள், தன்னைப்போல் எதிரியும் மானிடந்தான் என்று எண்ணுபவர்கள் இவ்வியக்கத்திற்கு ஒருக்காலும் எதிரிடையாக பேசவுமாட்டார்கள். நாயக்கரின் பிரசாரத்திற்கு இடைஞ்சலும் செய்யமாட்டார்கள்.

ஆனால் சில நண்பர்களுக்கு, "எங்கே வரதாராஜுலு நாயுடுகாரைப்போல் நாயக்கரும் புரண்டுகொள்வாரோ" என்ற ஓர் அச்சமிருக்கலாம். சிலர் இவ்வச்சத்தை வெளியிட்டுமிருக்கிறார்கள். இதற்கு என்சமாதானம் என்னவென்றால், நாயுடுகார் புரண்டுகொண்டதினால் சுயமரியாதை இயக்கம், சமத்துவ இயக்கம் நின்று விட்டதா? நற்சமயம் நாயக்கர் நடத்தி வரவில்லையா? அதைப்போலவே நாயக்கருக்குப்பிறகும் எத்தனையோ பேர் முளைத்துவிடுவார்கள்.

ஆகவே இனிமேல் நாயுடுகாரைப் போல் எத்தனை நாயுடுகார் புரண்டுகொண்டாலும் சரி, திரு நாயக்கர் புரண்டுகொண்டாலும் சரி, இவ்வியக்கத்தை யாராலும் நசுக்கிவிட முடியாது. அதன் வேகத்தை தணிக்கவும் முடியாது. அஃது திண்ணம்! திண்ணம்!! முக்காலும் திண்ணம்!!!

ஏனென்றால், இவ்வியக்கம் ஒவ்வொருவர் மனத்திலும் ரத்தத்திலும் பதிந்துபோகும்படியாக திரு நாயக்கர் செய்துவிட்டார். நமது வைக்கவீரசிங்கம் திரு நாயக்கரின் இயக்கத்தை வெறுப்பவர்கள் பொறாமை கொண்டவர்கள், சுயநலமிகள், அறிவீனர்கள், ஜாதி கர்வம் கொண்டவர்கள் என்பதற்கு ஓர் உதாரணம் மட்டும் சொல்லிவிட்டு விஷயத்தை முடித்து விடுகிறேன்.

நானும் எனது நண்பரும் ஆக இருவரும் நன்னிலம் தாலூக்கா திருமாகாளம் என்ற ஊரின் அக்கிராரத்தின் வழியாக சென்றுகொண்டிருக்கும் போது ஒரு வீட்டின் திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த இரண்டு மூன்று பிராமணர்களில் ஒருவர் எங்களைப்பார்த்து நீங்கள் யார்? எந்த ஊர்? எங்குசெல்லுகிறீர்கள்" என்று கேட்டார்.

"ஐயா நாங்கள் அசலூர்; இங்கு ஒருகாரியார்த்தமாக செல்லுகிறோம்" என்றோம் "உங்கள் ஊரில் அக்கிராரம் இருக்கிறதோ இல்லையோ" என்றார்கள் 'இருக்கிறது" என்றோம். "அப்படியிருக்கிறதாயிருந்தால் இப்படிக்கு மரியாதையற்றமுறையில் போகமாட்டீர்களே" என்றார்கள். "அப்படி நாங்கள் மரியாதையற்ற முறையில் போகவில்லையே, மரியாதையாகத்தானே செல்லுகிறோம்" என்றோம் "இல்லை இல்லை; அக்கிராரம் வழியே செல்லுகிறதாகயிருந்தால் இப்படித்தான் வேஷ்டியை தளர்த்திவிட்டு கணுக்கால் மறைய கட்டிக்கொண்டு போகிறதோ? அங்கவஸ்திரத்தை இப்படித்தான் மேலே போட்டுக்கொண்டு போகிறதோ? இதுவாமரியாதை? மரியாதையென்றால் இடை வேஷ்டியை தூக்கி பெருந்துடையளவில்கட்டிக்கொள்ளவேண்டும் மேல் அங்கவஸ்திரத்தை சுருட்டி கட்கத்திற்குள் வைத்துக்கொள்ளவேண்டும், ஒதுங்கி மெதுவாகவும், வணக்கமாகவும் போனாலல்லவோ மரியாதை" என்று அதிகாரமாகவும் அகங்காரமாகவும் சொன்னார்கள்.

நான் "இவர்களுக்கு தக்க மரியாதை செய்ய வேண்டுமென்றும் உடனே பதில் அளிக்காத வரையில் இன்னமும் மேன் மேலும் பேசுவார்கள் கொர்வம் படைத்த ஜாதி" என்றும் யோசனை செய்து கொண்டு, உடனே என் சிநேகிதனைப் பார்த்து, "நீ என்ன மடையனாய் இருக்கிறாயே! ஐயர்வாள் சொல்லுகிறபடி இடை வேஷ்டியையும் கோவணத்தையும் அவிழ்த்து தலையில் கட்டிக்கொண்டு அம்மணமாக போவோமாக; அப்படி அம்மணமாக போனால் தான் அக்கிராரத்திற்கு மரியாதை போலும்" என்று கொஞ்சம் கோபமாக அதட்டி என் சிநேகிதனைப் பார்த்து சொன்னேன். இப்படி நான் கோபக்குறியுடன் சொன்னதை கேட்டுக்கொண்டு திண்ணையிலிருந்த ஓர் பிராமணன் கீழிறங்கி வந்து "கோபிக்காதீர்கள் சார். நீங்கள் எந்த ஊர் சார், எங்களுக்குத்தெரியவில்லையே சார்" என்றான்:

உடனே நான் "எங்கள் ஊர் பிரஞ்சுக்காரன் ஊர் (காரைக்கால்) எங்கள் ஊரில் பணக்காரனென்றும், ஏழை என்றும், உயர்ந்த ஜாதி என்றும் தாழ்ந்த ஜாதி என்றும், வித்தியாசமில்லை; எல்லாம் சமம்" என்றேன். உடனே "அப்படியா சார்! எங்களுக்கு தெரியவராது சார். கோபித்துக்கொள்ளாதீர்கள் சார். தடையில்லாமல் போய் வாருங்கோ சார்" என்ற வெகு மரியாதையுடனும் வணக்கமாகவும் சொன்னார்கள். உடனே நாங்கள் "கொர்வம் படைத்த ஜாதிகள்!" என்ற சொல்லிக்கொண்டு எங்கள் வேலைக்கு நாங்கள் போய் விட்டோம்.

பார்ப்பனியம் ஒழிந்த திதியும் நன்கொடையும்.

சென்னிமலை செங்குந்த மகா ஜனங்களின் கூட்டமொன்று 2—7—28 தேதி பெரியதனக்காரர் சு. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று. அதுகாலை இவ்வூர் செங்குந்த பிரமுகர்கள் அனேகர் விஜயம் செய்திருந்தனர். செங்குந்தர்களுக்குள் நடக்கும் சுபாசுப காரியங்களில் பார்ப்பனர்களை அறவே நீக்கி தம் ஜாதியினர்களிலுள்ள அறிவாளிகளையும் பெரியோர்களையும் வைத்துக்கொண்டு எல்லாக்காரியங்களையும் நடத்த வேணடுமென்றும், கல்யாண முதலானவைகளுக்கு அநாவசியமான செலவுகளைச் செய்யாமல் கூடிய வரையில் சிக்கனத்துடன் நடந்துகொள்ள வேண்டுமென்றும், பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதையனுசரித்து 4—7—28-ஐ இவ்வூர் பிரபல வர்த்தகரும் செல்வவந்தருமான ஸ்ரீமான் ஓ. கொ. நாச்சிமுத்து முதலியாரவர்கள் தம்தகப்பனாருடைய வருடாந்தரத் திதியை பிராமணர்களை அறவே நீக்கி, தம் இஷ்டபந்து ஜனங்களுடன் கடவுளை பிரார்த்தித்து தம் பந்து மித்திரர்களுக்கும் சுமார் 500 ஏழை மக்களுக்கும் அன்னமளித்து சுயமரியாதையை நிலை நாட்டினார். 'திராவிடனுக்கு' ரூபாய் 2-8-0ம் 'குடி அரசு'க்கு ரூபாய் 2-8-0ம் நன்கொடையாக அளித்துள்ளார்.

அன்று மாலை 5-மணிக்கு ஈஸ்வரன்கோவிலில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அவ்வமையம் இவ்வூர் பிரமுகர்கள் பலர் விஜயம் செய்திருந்தனர். அக்கூட்டத்திற்கு ஸ்ரீலஸ்ரீ பாவடி சுவாமிகள் பழனிச்சாமி தம்பிரான் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். தலைவர் முன்னுரைக்குப்பின் ஸ்ரீ ஸ்ரீதர ஸ்வாமிகள் "இந்து மதமும் மூடச்சடங்குகளும்" என்னும் பொருள்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

மொ. ப. கிருஷ்ணசாமி முதலியார்.

பட்டிவீரன் பட்டி பார்ப்பனியம் ஒழிந்த திருமணம்.

இவ்வூரில் பிரபல மிராசுதாரரும் வர்த்தகருமான தோ. சா. வீரண நாடார் அவர்கள் திருக்குமாரத்தி அமிர்தம்மாளுக்கும் தேவதானப்பட்டி மிராசுதார் பெ. கா. முருகநாடார் அவர்கள் திருக்குமாரர் காளியப்ப நாடாருக்கும் ஆனி மாதம் 22 தேதி (5—7—28)ல் பார்ப்பன புரோகிதமின்றி திருமணம் இனிது நடந்தேறியது. மேற்படி திருமணத்திற்கு இவ்வூர் ஜவுளி வியாபாரி மா. சிதம்பரநாடார் அவர்களால்திருமணச் சடங்குகள் செய்யப்பட்டது. பார்ப்பன புரோகிதமின்றி நடக்க திருமணங்களில் இவ்வூரில் இதுவே முதல் திருமணமாகும். இவ்வூர் நாடார் மகா ஜனங்கள் இனி நடக்கப்போகும் ஒவ்வொரு திருமணத்தை இவ்விதமே பார்ப்பனப்பனப் புரோகிதமின்றி நடத்தப்போவதாய் உறுதிகூறுகிறார்கள்.

பி. கே. வி. ஐயம் பெருமாள் நாடார்.

பார்ப்பனியம ஒழிந்த திதி.

பல்லடம் தாலூக்கா சூலூரை அடுத்துள்ள அப்பநாயக்கன் பட்டியிலிருக்கும் ஸ்ரீமதி அங்கமுத்தம்மாள் தம்தாயாரின் முதல்வருஷ ஆண்டுவிழாவை முன்னிட்டு 22—6—28ல் எவ்வித பார்ப்பனப் புரோகிதரும் இல்லாமல் தாமே செய்து பார்ப்பனர்களுக்குக் கொடுப்பதை விடுத்து தங்கள் பந்து மித்திரர்களுக்கும் ஏழைகளுக்கும் விருந்திட்டு அவ்வாண்டு விழாவை சிறப்பித்து நடத்தினார்கள்.

எஸ். எ. மாணிக்க முதலி.

அருப்புக்கோட்டையில் ஜூலை 4, 5, 6 தேதிகளில் நடைபெற்ற 12-ம்

நாடார் சமூக மகாநாடு.

பொறையாறு

திரு. கனகசபை நாடார்

அக்கிராசனப்பிரசங்கம்.

சகோதர, சகோதரிகளே!

இப்பெருங் கூட்டத்தில் தலைமை வகித்துப் பிரசங்கம் செய்ய நீங்கள் என்னைத் தெரிந்தெடுத்ததை நான் பாராட்டுகிறேனில்லை. உங்கள் வகுப்பினர்களினின்றும் ஒருவருக்கு இச்சிறந்த பதவியை அளிக்கவேண்டுமென்ற ஓர் அவாவினாலிவ்வித முடிவு நீங்கள் செய்திருக்கலாம். ஆனால் இப்பெருமையை நம்முள், என்னிலும் வயதிலும், அனுபோகத்திலும், புகழிலும் மேம்பட்டவர்கள் அநேகர் வகிக்கத் தகுந்தவர்களிருப்பதால் அவர்களுக்கே இது உரியது என்று நான நினைக்கிறேன். என் குறைவுகளை முற்றும் உணர்ந்த என்மேல் இச் சமயம் சுமத்தப்பட்டிருக்கும் பொறுப்பையும், என்னிடம் நீங்கள் எதிர்பார்க்கும் விஷயங்களையும் நினைத்து நான் மனம் தடுமாறுகிறேன். நம் வகுப்பின் முன்னேற்றத்தில் எனக்குள்ள அவாவினாலும், அதற்கான தொண்டுபுரிய வேண்டுமென்ற விருப்பத்தால் மட்டுமே நான் உங்கள் அழைப்பை மறுக்காது ஏற்றுக்கொண்டேன். எனக்கிட்ட பணியை என்னாலியன்ற அளவு செய்து முடிக்கிறேன்.

நம் வகுப்பினரேயன்றி நமது லட்சியங்களிலும் நோக்கங்களிலும் அபிமானமுள்ளவர்களும் நமது முன்னேற்றத்தைக் கோருபவர்களுமான பல கனவான்கள் நிறைந்துள்ள இக்கூட்டத்தில் நான் நமது குறைகளையும், அவைகளைச் சீர்ப்படுத்துவதற்கான மார்க்கங்களையும் பற்றி மட்டும் பிரசங்கம் செய்வது சரியன்று. அன்றியும் பிறிதொரு சமயம் நான் இவ்விஷயங்களைப் பற்றி மட்டும் பேசவேண்டியிருப்பதால் தற்சமயம் தேசிய வாழ்க்கையில் நம்மவர்களின் நிலைமையைப் பற்றிமட்டும் சில வார்த்தைகள் கூறுகின்றேன்.

எவ்வித நோக்கங்களையும், அல்லது கருத்துகளையும் நிலைநிறுத்தவோ அல்லது விருத்தி செய்யவோ கூடும், எக் கூட்டத்திலும் "நமது நாடெங்கும் ஒரு நவீன உணர்ச்சி தோன்றியிருக்கின்றது" என்று சொல்லப்படுவதை நாம சாதாரணமாய் அறிவோம். இவ்வித உணர்ச்சி இந்தியாமட்டுமேயன்றி பொதுவாக உலகமெங்கும் பரவியுள்ளது. ஆயினும் அவ்விடங்களில் வெவ்வேறு விதமாக இவ்வுணர்ச்சி காணப்படுகின்றது. ஆனால் இவைகள் அனைத்தும் சுயேச்சையையும். சமத்வத்தையும் நிலைநிறுத்துவதையே கருத்தாகக் கொண்டுள்ளன. உதாரணமாக மேல்நாடுகளில் ஸ்திரீ புருஷர்களுக்குச் சமத்வ உரிமைகளை ஸ்தாபித்தற்பொருட்டு ஓர் உணர்ச்சியும் அது சம்பந்தமான கிளர்ச்சியும் நடந்து வருகின்றன. ஆனால் இந்தியாவிலோ மற்றத் துறைகளைக் காட்டிலும் பொருளாதார ஜனசமூக விஷயங்களில் இவ்வுணர்ச்சி பலமாகத் தோன்றுகின்றது. இதன் பயனாக முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமுள்ள பல வேற்றுமைகளையும் ஜனசமூகத்தின் பற்பல வகுப்பினருக்குள் ஏற்பட்டிருக்கும் வித்தியாசங்களையும் ஒழிக்கவோ அல்லது மாறுபடுத்தவோ முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தொழிலாளர் கூட்டமென்றும், இளைஞர் கூட்டமென்றும், ஸ்திரீகள் கூட்டமென்றும், சுயமரியாதைக் கூட்டமென்றும், ஒடுக்கப்பட்டவர் கூட்டமென்றும் இன்னும் விதவிதமான நாமங்களோடு கூட்டப்படும் கூட்டங்களும், சட்ட சபைகளின் மூலம் நிறைவேற்றப்பட்டிருப்பதும், நிறைவேற இருப்பதுமான பல மசோதாக்களும், பல கமிட்டி நியமனங்களும், அவர்கள் யாதாஸ்துகளும், ஜாதி, வகுப்பு, மதம் பற்றிய வித்தியாசம் யாதுமின்றி எவருக்கும சமத்வ உரிமைகளும், பொறுப்புகளும் கிடைக்கவேண்டியதற்கான முயற்சிகளையே குறிக்கின்றன. இவ்வித உணர்ச்சி எவ்வளவு தூரம் நம் வகுப்பைப்பற்றியுள்ளது என்பதை நம் கூட்டத்தின் நடவடிக்கைகள் தெரிவிக்க ஏதுவாயிருக்கலாம்.

இச் சங்கத்தை ஸ்தாபனம்செய்தவர்கள் நாம் சகல பாத்யதைகளையும் சுதந்திரங்களையும் உரிமை கொண்டாடுவதற்குத் தக்கவாறு யோக்கியதை எத்துறைகளிலும் நமக்கு உண்டாகவேண்டுமென்ற சிறந்த நோக்கத்தோடும் நம் வகுப்பினருள் ஒற்றுமையும் ஐக்கியபாவமும் நிலைபெற வேண்டுமென்றும இதை ஏற்பாடு செய்தனர். வருடந்தோறும் கூடும்நமது கூட்டத்திலும்நாம் எவ்வளவு தூரம் இந்த யோக்கியதைகளைப் பெற்றிருக்கிறோம் என்பதை ஆராய்வதன்றி அவைகளின் மூலம் நமக்குரியவையாயிருந்தும், தாழ்ந்த வகுப்பினரென்று கருதப்படுவதால் நமக்கு அளிக்கப்படாது மறுக்கப்பட்டுவரும் நமது உரிமைகளையும் நாம் பெற முயற்சிக்கிறோம். இந்நோக்கம் நிறைவேறும் பொருட்டு நாம் நமக்குள் இருக்கும் பல வித்தியாசங்களையும், ஒருவருக்கொருவரிடை இருந்துவரும்மன வேறுபாடுகளையும் பொருட்படுத்தாது மறந்து எவ்வளவு தூரம் நாம் ஏகமனதாய் நமது வகுப்பின் நலத்திற்காகப் பாடுபடத் தயாராயிருக்கிறோம் என்பதைக் காட்டிவருகிறோம். பிறவகுப்பினர்களையும் நமக்கு அவர்கள் அபிமானத்தால் புரியக்கூடிய உதவிபுரியும்படியும் நம் முயற்சிகளில் ஈடுபடும்படியும வேண்டிவருகிறோம். ஆனால் நமது முயற்சிகளெல்லாம் பயனிலவாயிருக்கின்றனவென்றும்; பிறர் அபிமானத்தினால் மட்டும் நமக்கு அதிக நன்மைகள் கிடைக்க ஏதுவில்லையென்றும நாம் கூறுவது சரியன்றோ என்று நான் உங்களைக் கேட்கிறேன். பலதுறைகளிலும் நாம் சிறப்புப் பெற்றிருந்தும் நமது யோக்கியதைகளுக்குத் தகுந்த கௌரவம் நமக்களிக்கப்படவில்லை. பகிரங்கமாய் அவர்கள் கூறிவரும் கொள்கைகள் எவையாயிருப்பினும் சரி, பொதுக்கூட்டங்களிலும், பத்திரிகைகளிலும் அவர்கள் கூறும் செய்திகள் எவையாயிருப்பினும் சரி, ஒவ்வொரு வகுப்பினரும் தங்கள் தங்கள் பரம்பரை உரிமைகளையும் சுதந்திரங்களையும் விட்டுக்கொடுக்காது வெகு ஜாக்கிரதையாயும் ஊக்கமாயும் காத்துவருகின்றனர். இவைகளுக்கு ஆதாரமாய்ப் புராதன பழக்க வழக்கங்களையும் தொன்றுதொட்டு நடந்துவரும் முறைகளையும் எடுத்துக்காட்டுகின்றனர். இவ்வார்த்தைகளுக்குச் சான்றாக ஒரு உதாரணம் ஞாபகமூட்டுகின்றேன். தஞ்சாவூர் வட்டம் ஆலயக் கமிட்டியார் (Temple Committee) சில மாதங்களுக்கு முன் நம் வகுப்பினர்களில் ஒருவர் அக்கமிட்டிக்கு நியமிக்கப்படுவது கூடாதென்று மும்முரமாய் எதிர்த்தனர். என் முன்னோரில் ஒரு பெரியார் கும்பகோண ஆலயக்கமிட்டி அங்கத்தினராய் அரும் பெருங்காரியங்களை இயற்றியிருக்கிறார் என்பதை யாவருக்கும் தெரிவிக்கிறேன். என் காரியங்களைச் சாதிக்கவேண்டுமென்ற சுயநலங்கருதியோ அல்லது நம்மைப்போன்ற சிறுபான்மை வகுப்பினருக்கு இன்றியமையாததான சில உத்தியோகங்களும் நியமனங்களும் நம்மவர்களுக்குக் கிடைக்கவேண்டுமென்றாவது நான் விஷயங்களை இங்கு எடுத்துரைக்கவில்லை. ஆனால் இவைகளைக் கொண்டு எப்படி நம்முடைய உரிமைகள் ஜாதித் தாழ்மை என்ற ஓர் வேறுபாட்டினால் நமக்கு மறுக்கப்படுகின்றன என்பதை மட்டும் விளக்கவேண்டுவதே என் நோக்கம். இந்தச் சந்தர்ப்பத்தில் முன் ஒரு கூட்டத்தில் தலைமை வகித்த ஒரு கௌரவ அக்கிராசனர் பேசியுள்ள மொழிகள் நினைவுக்கு வருகின்றன. அவர் கூறியதாவது:— "ஒவ்வொரு ஜாதியாரும் தாம் முன்னேற்றமடைந்ததும் தம்மை மேல் வகுப்பினராகக் கருத ஆரம்பிக்கின்றனர்". இந்தச் சமயத்தில் நமது சென்னைக் கவர்ன்மெண்டின் முதன் மந்திரியும் பல நியமனங்களைச் செய்யும் அதிகாரம் வகிப்பவரும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு உள்ளன்புடையவருமான கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் இவ்விடம் விஜயமாகி நமது கூட்டத்தின் சிறப்பையும், பெருமையையும் தாமே பார்த்தறிய ஏற்பட்டது நமது நல்லதிர்ஷ்டமே. இதினின்றும் சமத்வ உரிமைகளை நாம் வகிப்பதற்கான போக்பதாம்சங்கள் உடையவர்களா அல்லவா என்பதை அவரே தீர்மானித்தறிந்து நமக்கு இடையூறு செய்வதற்கென்றே வீணாகக் குறுக்கிடுபவர்கள் கூற்றைச் செவியிலேற்காது புறக்கணித்தல் கூடுமன்றோ? இங்கு கூடியிருக்கும் இக்கூட்டத்தினின்றும், ஸ்தானத்தின் அகமும் மேற் பிறப்பென்ற வேறுபாடும் தேசத்தின் முன்னேற்றத்திற்கு இடையூறுகள் ஆகும் என்பதே தேச நலத்தையே மற்றெவற்றிலும் மேன்மையாகக் கருதுபவருக்கு நாம் கூற விரும்பும் சிறந்த செய்தியாகும். நம்முடைய பிறவகுப்புச் சகோதரர்கள் தங்கள் மனோபாவத்தை மாற்றுவதற்கான காலம் வந்துவிட்டது என்பதை அறிவார்களாக! நம்தேசத்தில் சட்டதிட்டங்களைக் கொண்டேதான் சமுதாய விஷயங்களிற்கூட சீர்திருத்தங்கள் செய்யவேண்டியதாயிரு

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.)

ஜூலை 4, 5, 6-தேதிகளில்

அருப்புக்கோட்டையில்

மகா பெருங்கூட்டம்.

பல மகாநாடுகள்.

1. நாடார் சமூக மகாநாடு. 2. நாடார் சமூக வாலிபர்கள் மகாநாடு.
3. நாடார் சமூக தொண்டர்கள் மகாநாடு.

திறந்து வைத்தவர்:—

முதல் மந்திரி டாக்டர். சுப்பராயன்,

தலைவர்கள் முறையே:—

1. பொறையாறு திரு. கனக சபை நாடார்.
2. திரு. வி. கல்யாணசுந்தர முதலியார்.
3. திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

மகாநாட்டு வைபவங்கள்.

அருப்புக்கோட்டையில் நாடார் சமூக மகாநாடு இவ்வருஷம் நடைபெற சுமார் 4 மாதகாலமாகவே அவ்வூர் பிரமுகர்கள் வெகு ஊக்கத்தோடு தக்க முயற்சிகள் செய்து வந்ததின் பலனாக இதுவரை சமீபகாலத்தில் தமிழ் நாட்டில் நடந்த எந்த மகாநாட்டையும்விட சிறப்பாகவும் பெருமையாகவும் நடைபெற்றதென்றே சொல்லவேண்டும்,

மகாநாட்டு பந்தல்கள்.

மகாநாட்டுப் பந்தலானது பெரிய காங்கிரஸ் பந்தலைப்போல் 100 அடிக்கு மேல் வட்டமாக கொட்டாய் போட்டு, முழுவதும் பெஞ்சிகளும் நாற்காலிகளுமாக இடம் பிரித்து பிரித்து ஒதுக்கி, மேடையை ஒரு பெரிய அரண்மனைமண்டபம் போல் சிங்காரமாய் ஜோடித்து, சுற்றிலும் சித்திர வேலைகள் செய்த அட்டைத் தூண்களை நிறுத்தி, மேல் பாகமெல்லாம் சலவைத் துணிகள் கட்டி, பல துறைகளாகவும் மேல் மாடிகளாகவும் பிரித்து காட்டி, பல வர்ணமணிகளால் ஜாலரா தொங்கக்கட்டி, வர்ணக்காகிதங்களாலும் சிங்காரித்து, பார்ப்போர் கண்களுக்கு ஒரு பெரிய கட்டிடம் போலவே காணும்படியாக செய்யப்பட்டிருந்தது.

சமயல் கொட்டாய்கள்.

100 அடி நீளத்திற்கும் 30 அடி அகலத்திற்குமாக பிரதிநிதிகள் சாப்பிட இரண்டு கொட்டகைகளும் அது போலவே சமையலுக்கு ஒரு கொட்டகையும், இதற்காகவே பல கிணறுகளும் தொட்டிகளும் உண்டாக்கப்பட்டும் இருந்தன.

பிரதிநிதிகள் தங்குவதற்கு

பல கட்டிடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு கட்டிடத்திற்கும் முன்புறம் பெரிய பெரிய பந்தல்களாலும், தெருக்கள் முழுவதும் தோரணங்களாலும், நூறு நூறு அடிக்கு ஒவ்வொரு வளைவுகளாலும், அருமையான சுயமரியாதை வாக்கியங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தொண்டர்கள் நூற்றுக்கணக்காய் தொண்டருடைகளுடன் எங்கு பார்த்தாலும் அணி அணியாய் விளங்கிக்கொண்டிருந்தார்கள். அருப்புக்கோட்டை பட்டணம் முழுவதும் 3, 4 நாளாய் ஒரு பெரிய திருவிழா போலவே விளங்கிக்கொண்டிருந்தது.

தலைவர்கள் வருகை.

4-ந்தேதி பகல் 3-மணி சுமாருக்கு திருவாளர்கள் டாக்டர் சுப்பராயன், கனகசபை நாடார், சவுந்திர பாண்டிய நாடார், P. T. ராஜன், R. S. நாயுடு, தாலூகா போர்டு பிரசிடெண்டு ராஜம் நாயுடு, ஈ. வெ. ராமசாமி நாயக்கர், செந்தில் குமார நாடார் முதலியோர்கள் மதுரையிலிருந்தும் விருதுபட்டியிலிருந்தும் வந்து சேர்ந்ததும் பெரிய அதிர்வெடிகள் போடப்பட்டு பாண்டு வாத்தியங்களுடன் பூச்சக்காக்குடை, கொடி, தோரணங்கள், யானைகள், குதிரைகள் முதலியவைகளோடு மோட்டார் காரிலும் இரட்டைக் குதிரை பூட்டிய வண்டிகளிலும் சுமார் பதினாயிரம் ஜனங்கள் சூழ ஊர்வலமாக சரியாய் 5-மணிக்கு கொட்டகைக்கு அழைத்துவரப்பட்டார்கள்.

பெருத்த கரகோஷத்துடனேயும், தொடர்ந்த அதிர் வேட்டுகளுடனேயும் ஜே! சப்தத்துடனேயும் தலைவர்கள் கொட்டகைக்குள் நுழைந்ததும் கொட்டகை முழுவதும் பன்னீர் தெளிக்கப்பட்டு புஷ்ப மாரி பொழியப்பட்டு மாலைகள் சூட்டப்பட்டு தலைவர்கள் ஆசனத்தமர்ந்ததும்,

மகாநாட்டுத் திறப்பு விழா.

நாடார் சமூகத் தலைவர் திரு கனகசபை நாடார் அவர்கள், டாக்டர் சுப்பராயன் அவர்களை மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி வேண்டிக்கொண்டார். பெருத்த கரகோஷத்திடையே மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் எழுந்து ஒரு அருமையான பிரசங்கம் செய்துவிட்டு மகாநாட்டைத் திறந்து வைத்ததாக வெளியிட்டார். உபசாரணை அக்கிராசனர் திரு சிதம்பர நாடார் தமது உபசாரணை உபன்யாசம் செய்தார்.

பிறகு மகாநாட்டுத் தலைவர் திரு. கனக சபை நாடார் எழுந்து அக்கிராசனப் பிரசங்கத்தை வாசித்தார். இது சமயம் மக்கள் காட்டிய உற்சாகத்திற்கு அளவேயில்லை.

உபசாரப்பத்திரங்கள்.

இது முடிந்தவுடன், திருவாளர்கள் டாக்டர் சுப்பராயன் அவர்களையும், கனகசபை நாடார் அவர்களையும், ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களையும் மோட்டார் வண்டியில் ஊர்வலமாக அருப்புக்கோட்டை நாடார் மகாஜன ஹைஸ்கூலுக்கு அழைத்துச் சென்று உபசரித்து சிற்றுண்டி வழங்கி, மறுபடியும் ஊர் வலமாக அருப்புக்கோட்டை யூனியன் போர்டு ஆபீசுக்கு அழைத்துச் சென்று மந்திரிக்கு உபசாரப்பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது. பிறகு ஆரம்ப ஆசிரியர் சங்க உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு அங்கிருந்து சொக்கலிங்கபுரம் அழைத்துச் சென்று அங்கு சாலிய மகா ஜனங்களால் டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஒரு உபசாரப்பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டு சாலிய மகா ஜன சங்கப்பள்ளிக்கூடம் என்பதாக ஒரு பள்ளிக்கூடம் மந்திரியால் திறக்கப்பட்டது. எங்கும் டாக்டர் சுப்பராயனுக்கு ஜே! ஈ. வெ. ராமசாமி நாயக்கருக்கு ஜே! வைக்கம் வீரருக்கு ஜே! சுயமரியாதைக்கு ஜே! என்கின்ற சப்தமே வானத்தைப் பிளந்துகொண்டிருந்தது. ஊர் பொதுக் கடைகளும் பல வீடுகளும் அலங்கரிக்கப்பட்டிருந்த காக்ஷியும், தேர்கள்போல் தோரணங்களை கட்டியிருந்த காக்ஷியும், மக்களுக்குள் பரபரப்பும் ஆனந்தமும் தோன்றிய காக்ஷியும் பார்த்தவர்களே உணரக்கூடும்.

அன்று இரவே திரு. நாயக்கர் முத்துராமலிங்கபுரத்துக்கு ஒரு சுயமரியாதை திருமணம் நடத்திவைக்கப் புறப்பட்டுவிட்டார். டாக்டர் சுப்பராயனும் அவர்களது நண்பர்களும் மதுரைக்குப் புறப்பட்டுவிட்டார்கள்.

வாலிபர் மகாநாடு.

மறுநாள் காலையில் வாலிபர்கள் மகாநாடு ஆரம்பிக்கப்பட்டது. திரு. மா. மாணிக்கவேல் நாடார் அவர்கள் உபசாரணை பிரசங்கம் முடிந்தவுடன் திரு. வி. கல்யாண சுந்தர முதலியாரவர்கள் அக்கிராசனராக பிரேரேபிக்கப்பட்டு அக்கிராசனப்பிரசங்கம் நிகழ்த்தினார். அப்பிரசங்கம் முழுவதும் புராண விஷய பிரசங்கமாகவே வாலிபர்களுக்குக் காணப்பட்டதால் இடையிடையே பலர் தங்கள் அதிருப்திக் குறிகாட்டினார்கள். சிலர் எழுந்து கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்கள். திரு நாயக்கர் அவர்கள் பல நண்பர்களைக் கண்டித்து இம்மாதிரியாகச் செய்வது சபையோருக்குத்தான் குறைவாக கருதப்படுமென்றும், திரு. முதலியாரவர்களுக்கு தமது அபிப்பிராயத்தைச் சொல்ல உரிமை உண்டென்றும் சொல்லி கண்டித்து அடக்கி வைத்துக்கொண்டேயிருந்தார். பிறகு சில தீர்மானங்கள் நிறைவேற்றியதும் அம்மகாநாடு முடிவுபெற்றது.

மகாஜன மகாநாடு-

பகல் போஜனம் முடிந்தவுடன் 3-மணிக்கு மகாஜன மஹாநாடு கூடியதும் தலைவர் திரு. கனகசபை நாடார் மறுபடியும் மகா

நாட்டுத் தலைவர் உபன்யாசம் என்பதாக ஒரு உபந்யாசஞ்செய்தார்.

நிர்வாக சபை தேர்தல்.

பிறகு மகாநாட்டுக்கு நிர்வாக சபை அங்கத்தினர் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். அதாவது திரு. கனக சபை நாடார் அவர்கள் தலைவராகவும் திரு. விருதுபட்டி செந்தில் குமார நாடார் அவர்கள் உபதலைவராயும் திரு. சௌந்திர பாண்டிய நாடார் எம். எல். சி. அவர்கள் காரியதரிசியாகவும் திரு. பட்டிவீரன்பட்டி வியாபாரி பெரியதம்பி நாடார் அவர்கள் கூட்டுக் காரியதரிசியாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். இத்தேர்தலைக்கேட்ட நாடார் சமூக மக்கள் செய்த ஆரவாரத்திற்கும் காட்டிய மகிழ்ச்சிக் குறிப்புக்கும் அளவேயில்லை. மற்றும் தக்கசெல்வாக்குள்ளகனவான்கள் நிர்வாக சபை அங்கத்தினர்களாக தெரிந்தெடுக்கப்பட்டனர்.

தொண்டர் மகாநாடு

மறுநாள் காலையில் தொண்டர் மகாநாடு துவககப்பட்டது. திரு எஸ். கே. ராமசாமி நாடார் அவர்கள் வரவேற்பு உபந்யாசமாக இரண்டொருவார்த்தைகள் சொல்லி முடித்தார். பிறகு திரு. கனகசபைநாடார் அவர்களால்பிரேரேபிக்க திரு சௌந்திரபாண்டிய நாடார் அவர்களால் ஆமோதிக்க திரு. செந்தில் குமார நாடார் அவர்களால் ஆதரிக்க பெருத்த கரகோஷ ஆரவாரத்துடன்

திரு. நாயக்கர்.

அக்கிராசனத் தமர்ந்து இரண்டரை மணிநேரம் அக்கிராசன உபந்யாசம் செய்தார். அக் கூட்டத்தில் இருந்த சுமார் மூன்றுயிரம் பேர்களும் இந்த இரண்டரை மணி நேரமும் தங்களை மறந்து விட்டார்கள் என்றே சொல்லவேண்டும். 'தொண்டு' என்பது பற்றியும் தொண்டர்கள் என்பவர்கள் தொண்டு என்பதையும் தங்களையும் தவிர அதற்குமேல் ஒன்று இருப்பதாகக் கருதக்கூடாது என்றும், தேசீயப் புரட்டு, மதப்புரட்டு, கடவுள் புரட்டு, புராணப் புரட்டு ஆகியவைகள் இன்னின்னவை என்றும், அவைகளை வெளியாக்கி அடியோடு ஒழிப்பதையே தொண்டர்கள் கடமையாகக் கொள்ளவேண்டும் என்றும், அதுதான் சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய கொள்கை என்றும், இதுபோது நம்மக்கள் அடிமையாகி பகுத்தறிவற்று மூர்க்கர்களா யிருப்பதற்கு காரணம் மேல்கண்ட புரட்டுகளும் அப்புரட்டில் பட்ட கடவுள்களுந் தான் என்றும், வெகு ஆவேசத்துடன் விளக்கி காட்டினர். மனிதன் தன் பேரிலும் தன் அறிவின் பேரிலும் நம்பிக்கை வைத்து அவைகள்மீது பாரத்தைப் போட்டு நடந்து வரும் நாட்டினர்களினுடையவும நாட்டினுடையவும்யோக்கியதைகளையும், மனிதன் சகலத்தையும் வேதசாஸ்திர புராணங்கள் மீதும் கடவுள்கள் மீதும் பாரத்தைப் போட்டு நடந்துவரும் நாட்டினுடையவும் நாட்டினர்களுடையவும் யோக்கியதைகளையும் பல உதாரணங்களுடன்விளக்கிக்காட்டினர். அதுமுதல் அங்கிருந்த மூவாயிர மக்களும் புது உணர்ச்சி பெற்று தாங்கள் புதிய உலகத்தை அடைந்து விட்டார்கள் என்றே சொல்லவேண்டும். இதற்கு உதாரணம் என்னவென்றால் மகாநாட்டில் இருந்த மக்கள் அவ்வளவு பேரும் திரு. நாயக்கர் அவர்கள் ஜாகைக்கு வந்து "நாங்கள் இதுவரை ஆழ்ந்து கிடந்த அஞ்ஞான இருளிலிருந்து நீங்கி இங்கு மெஞ்ஞான ஒளியை அடைந்துவிட்டோம். இனியும் நீங்கள் குறைந்தது ஒரு கால் நூற்றுண்டாவது இருக்கவேண்டும்" என்று சொல்லிப்போன வண்ணமாகவே இருந்ததும் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஊருக்கு வரும்படி அழைத்ததும் போதுமான உதாரணம் என்றுசொல்லலாம்.

மறுபடியும் பிற்பகல் மூன்று மணிக்கு சமூக மகாநாடு கூடிற்று பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தனோபசாரத்துடன் சந்தோஷ ஆரவார எழுச்சியுடன் மகாநாடு இரவு 8 மணிக்கு முடிந்தது. மறுபடியும் 8 மணி முதல் 11 மணி வரையில் சொக்கலிங்கபுரத்தில் சுமார் 2000 மக்கள் இடையில் வக்கீல் திரு ராமச்சந்திர சேர்வை பி. ஏ. பி. எல் அவர்கள் அக்கிராசனத்தில் கதர், தீண்டாமை என்னும் விஷயமாக சுமார் 2 மணிநேரம் திரு நாயக்கர் அவர்களும்சுமார் அரைமணி நேரம் திரு மல்லய்யா செட்டியார் அவர்களும் உபந்யசித்தார்கள். இந்த இரவே மகாநாட்டுக்கு வந்திருந்தமக்கள் எல்லோரும் புறப்பட்டு விட்டார்கள் என்றே சொல்லலாம்.

ஒரு விசேஷம்.

எப்போதும் இந்த மகாநாட்டுக்கு பிரதிநிதிகள் வந்தால் முதல்நாள் இருந்து விட்டு இரண்டாம் நாள் பகலில் திரும்பி போய் விடுவது வழக்கம் இந்த தடவை மூன்று நாட்களும் வந்த பிரதிநிதிகளும் மற்றும் உள்ள ஜனங்களும் தங்கி இருந்ததோடு முதல் இரண்டுநாட்களைவிட மூன்றும் நாள் நடந்த தொண்டர் மகாநாட்டிற்கே அதிகமான பிரதிநிதிகளும் காட்சியாளர்களும் பிரசன்னமாயிருந்தார்கள். எங்குபார்த்தாலும் தொண்டர் மகாநாட்டு அக்கிராசனப்பிரசங்கத்தைப் பற்றிய பேச்சாகவே யிருந்தது.

சாப்பாடு முதலிய வசதிகள்.

மகாநாட்டு சாப்பாட்டு வசதி மிகவும் சேர்த்தியாகவேஇருந்தது. ஆயிரத்து இருனூறு இனுமல் டம்ளர்கள் வாங்கப்பட்டதாக சாப்பாட்டு காரியதரிசி சொன்னர். தலையணைகளும் பாய்களும் ஆயிரக்கணக்காக வாங்கப்பட்டிருந்தது. சாப்பாடு வகைகள் மிக தாராளமாகவே பக்குவம் செய்யப்பட்டிருந்தன. காலைச்சிற்றுண்டிக்கு இட்டலி, அல்வா, உப்புமா, ரவாகேசரி ஆகிய நான்கு பதார்த்தங்களும் வாழைப்பழம் மாம்பழம் இவைகளுடன் பரிமாறப்பட்டன பானவகைகளும் அவரவர்கள் இஷ்டப்படி காபி, தேயிலை, கோகோ, பால்,மோர் ஆகியவைகள் தாராளமாய் கொடுக்கப்பட்டன. பகல் சாப்பாடுகளும் பலகாய்கறிகளுடனும் இனிப்பு வகை பலகாரங்களுடனும் (தினம் ஒவ்வொரு விதமாக) பழவகைகளுடனும் தினம் புதுபுது பதார்த்தங்களாகவே பரிமாறப்பட்டன. நெய், ரசம் போல் தாண்டவமாடிற்று என்றே சொல்லவேண்டும். ஒவ்வொரு பந்திக்கு 600, 700 பேர்களுக்கு குறையாமல் பல பந்திகள் ஒவ்வொருவேளையும் உட்கார்ந்து சாப்பிட்ட வண்ணமாகவே இருந்தார்கள். மகாநாட்டுக்கு வந்த அச்சமூகத்தலைவர்கள் எல்லாம் ஒவ்வொரு பிரதிநிதியினுடையசவுக்கியத்தைப்பற்றி விசாரித்து தக்கது செய்த வண்ணமாக இருந்தார்கள்.

தொழிலாளர்

நாகப்பட்டணத்திலிருந்து 15 தொழிலாளர்கள்வந்திருந்தார்கள். அவர்களையும் அன்புடன் உபசரித்து சாப்பாடு முதலிய சவுகரியங்களும் செய்து, அவர்களுக்கும் தொண்டர் மகாநாட்டில் பேசி தங்கள் கஷ்டங்களை சொல்லிக் கொள்கை உரிமைகொடுத்து, வந்திருந்ததலைவர்களும்பிரதிநிதிகளும் தலைக்கு, 10, 5, 2, 1, ½, ¼, வீதம் ரூபாய் உதவியும் செய்து, தொழிலாளர்களிடம் தங்களுக்குள்ள அனுதாபத்தைக் காட்டிக் கொண்டது மிகவும் குறிப்பிடத் தக்கது. அதுபோலவேபத்திரிகைப்பிரதிநிதிகளுக்கு இடவசதி, சாப்பாட்டுவசதி, ரயில்சார்ஜ்செலவு வசதிமுதலியவைகள் செய்துகொடுத்ததும்போற்றத்தக்கது. இவ்வளவுபொறுப்புகளும்'நடார்குலமித்திரன்' பத்திராதிபர்திரு முத்துநாடார் அவர்களும் உப பத்திராதிபர் திரு. பாண்டியன் அவர்களும் மற்றும் உபசாரணைத் தலைவர் திரு. சிதம்பரநாடார அவர்களும் அவர்களுடைய இஷ்டமித்திர பந்துக்களும் மற்றும் பலபெரியோர்களும் எடுத்துக் கொண்ட முயற்சி என்று தான் சொல்லவேண்டும்.

சிவகாசி.

மறுநாள் காலையில் திருவாளர்கள் ஈ வெ ராமசாமி நாயக்கர், கனகசபை நாடார், சவுந்திரபாண்டிய நாடார், செந்தில் குமார நாடார், தூத்துக்குடிகவுன்சிலர் கந்தசாமி நாடார், கருப்பய்யாபிள்ளை, சிவகாசிமகாஜனங்களால் அழைக்கப்பட்டு அருப்புக்கோட்டையிலிருந்து நேரேசிவகாசிக்குமோட்டார் வழியாக அழைத்துச்செல்லப்பட்டார்கள்.

சிவகாசிக்கு ஒரு மைல் தூரத்திலேயே சிவகாசி பொது ஜனங்கள் எதிர்கொண்டுபசரித்து மாலையிட்டு பாண்டுவாத்தியங்களுடன் ஊர்வலமாக ஜாகைக்கு அழைத்துச்சென்று சிற்றுண்டி வழங்கினர்கள். அரைநாள் முன்னறிவிப்பிற்குள்ளாகவே ஊர் முழுவதும் அலங்கரித்து, வளைவுகள் போட்டு, எங்குபார்த்தாலும் சுயமரியாதை வசனங்கள் விளங்கும்படியான வால்போட்டுகள் என்ற சுவர் விளம்பரங்கள் ஆயிரக்கணக்காக சுவர்களில் ஒட்டியும், தட்டிகளில் ஒட்டவைத்து கட்டியும், தெரு முழுவதும் முக்கிய இடங்களில் நட்டும் அலங்கரித்திருந்த காட்சி வந்த தலைவர்களின் மனதைக் கவர்ந்து விட்டது. சிவகாசி சேர்ந்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் திரு. நாயக்கருக்கு சிறிது காய்ச்சலும் மயக்கமும் உண்டாய் விட்டது உடனே டாக்டரவர்களை தருவித்து உபசாந்தி செய்து திரு. நாயக்கர் இன்று பேசக்கூடாது என்று கட்டளை இடப்பட்டு விட்டால் பிறகு பெரிய கஷ்டத்தின் பேரில் டாக்டரிடம் அரைமணி நேரம் பேச அனுமதி பெறப்

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசியெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-ஹு ஆனி மீ 32-உ

மறுபடியும் பஹிஷ்காரக்கூச்சல்.

சைமன் கமீஷன் பகிஷ்காரம் என்பதாக மறுபடியும் கூச்சல் போட கிளம்பி விட்டார்கள். இக்கூச்சலின் உள்கருத்து அடுத்து வரப்போகும் சட்டசபைத் தேர்தலில் பார்ப்பன ஆதிக்கத்திற்கு வழிதேடவேயாகும். இதற்காகவே இச்சூழ்ச்சிகண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றது என்றும், அதற்காகவே பார்ப்பனர் அல்லாதாரிலும் சில தேசீய வயிற்றுப்பிழைப்பு ஆசாமிகளையும் கஞ்சிக்கு வேறுவழியில் பிழைக்கவகையில்லாத ஆசாமிகளையும் பிடித்து கூலி கொடுத்து சைமன் பகிஷ்காரம் என்னும் பேரால் பார்ப்பனக் கக்ஷி ஆதிக்கப் பிரசாரமும் பார்ப்பனரல்லாதார் கக்ஷிகளை வைது அதன் முற்போக்குக்கு இடையூறான பிரசாரமும் நடத்த பார்ப்பனர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்றும் இதற்கு முன் பல தடவைகளில் எழுதி சைமன் கமீஷன் பகிஷ்காரம் என்பது புரட்டு என்பதற்கும் ஒரு வகுப்பாரின் சுயநலம் என்பதற்கும் பல ஆதாரங்களையும் எடுத்துக் காட்டிவந்தோம். அவைகளில் ஒன்றுக்காவது எந்த 'தேசியவாதி'யாவது 'தேசியபத்திரிகை'யாவது அல்லது பார்ப்பனர்களின் தாசியவாதியாவது தேசியப் பத்திரிகையாவது இதுவரை பதிலுரைத்தவர்கள் அல்ல. நமது கேள்விகளை மூடி வைத்துக்கொண்டு பாமர மக்களின் மூடத்தனத்தை தங்களுக்கு ஆதாரமாய் வைத்துக்கொண்டு தங்களால் கூடுமானவரை சூழ்ச்சிப்பிரசாரம் செய்த வண்ணமாகவே இருந்தார்கள். இச்சுயநலக்கூட்டத்தாரும் வயிறுவளர்ப்புக் கூட்டத்தாரும் எவ்வளவு சூழ்ச்சிப் பிரசாரம் செய்தும், எவ்வளவு போலி தேசிய வேஷம் போட்டும், இவர்களது நம்பிக்கைக்கு விரோதமாய் இப்போலிகளின் பிரசாரத்தால் நாங்கள் ஏமாறவில்லை என்பதைக் காட்டவும் போலிகளுக்கு இனி நாட்டில் இடம் கொடுக்கமாட்டோம் என்று முடிவு செய்ததைக் காட்டவும் பாமர மக்கள் அர்ட்டால் தினத்தை நன்றாய் உபயோகித்துக்கொண்டு தக்கபடி புத்தி கற்பித்து விட்டார்கள். அதன் பலனாகவே மறுபடியும் அர்ட்டால் என்கின்ற பேச்சுகூட பேசமுடியால் செய்து விட்டார்கள். ஒன்றிரண்டு மாதம் வரை கூட்டம்போட்டு பேசவும் யோக்கியதை இல்லாமல் செய்ததோடு இப்போலி தேசீய வாதிகள் தாங்களே "நாங்கள் அர்ட்டால் செய்யப்போவதில்லை" என்று சர்க்காருக்குத் தெரிவிக்கும்படியான நிலைமையில் வைத்து விட்டார்கள். சர்க்கார் இனி அர்ட்டால் செய்யக் கூடாது என்று போட்ட 144-ஆம் தடை உத்திரவையும் வாங்கி பூஜை வீட்டில் வைத்து அதற்கு கீழ் படிந்து பூஜை செய்துகொண்டிருக்கும்படியான நிலைமைக்கும்வந்து விட்டார்கள்.

அன்றியும் இந்தியா முழுவதும் பகிஷ்காரத்தில் இருக்கின்றது என்றும், வெற்றி மேல் வெற்றி என்றும் கத்திக்கொண்டிருந்ததும் மறைந்து போய், அவர்கள் மாறிவிட்டார்கள்! இவர்கள் மாறிவிட்டார்கள்! அந்த மாகாண சட்டசபை ஒத்துழைக்கப் போகின்றது! இந்த மாகாண சட்டசபை ஒத்துழைக்கப் போகின்றது! இனி என்ன செய்வது! என்று கூடி ஒப்பாரி வைத்து அழ ஆரம்பித்து விட்டார்கள்.

இந்த நிலையில் பகிஷ்காரப்போலிகளினுடையவும் கூலிகளினுடையவும் உண்மை வேஷம் வெளிப்பட்டு விட்டது.

அதாவது, திருவாளர்கள் ஒ. கந்தசாமி செட்டியார், குழந்தை, அண்ணாமலை, நைனியப்பர், பஷீர் அகம்மது, அமீதகான், இரத்தினசபாபதி முதலியோர்கள் திக்கு விஜயம் செய்ய தமிழ் நாட்டிற்குள் பிரசாரத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். பத்திரிகைகளையும் கூப்பாடு போட உசுப்படுத்தி விட்டிருக்கிறார்கள். இவர்கள் செய்யும் வேலைகளை கவனித்துப்பார்த்து வருபவர்களுக்கு இவர்களின் வேஷம்விளங்காமல் போகாது. அதாவது, பார்ப்பனரல்லாதார் கட்சியையும் அக்கட்சித் தலைவர்களையும் காரணமில்லாமல் இழிதுறைகளில்வைத்து குரைப்பதும், அவர்களுக்கு அடுத்த தேர்தலில் ஓட்டுக்கொடுக்காதீர்கள் என்றும் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பன கூலிகளுக்கும் அடிமைகளுக்கும் ஓட்டுக் கொடுங்கள் என்றும் எழுதுவதும் கூப்பாடு போடுவதுமான கூலிக்கு மாரடித்து அழும் காரியங்களாலும், எவ்வளவு எழுதினாலும் எவ்வளவு தொண்டை கிழிய கத்தினாலும் அதை நம்பி ஏமாந்து போகும் காலமே மலையேறிப்போய் விட்டதால் சென்றவிடமெல்லாம் தக்க மரியாதை கற்பிக்கப்பட்டும் கூட்டம் கலைக்கப்பட்டும் கூலிகள் ஓட்டப்பட்டும் நடந்துவரும் காரியங்களாலும் நன்கு உணரலாம்.

இந்த பகிஷ்கார விஷயத்தில் பார்ப்பனர்கள் கூலிகொடுத்து பார்ப்பனரல்லாதாரிடையில் மாத்திரம் பகிஷ்காரப்பிரசாரம் செய்யச்செய்திருக்கிறார்களே ஒழிய தங்கள் சமூகத்தைப் பொருத்தவரை பகிஷ்காரத்திற்கு விரோதமாகவே பிரசாரம் செய்து ஜாக்கிரதையாய் இருக்கின்றார்கள். அதாவது,

பார்ப்பன சபையும் வர்ணாசிரம பார்ப்பனசபையும் சைமன் கமிஷனை பகிஷ்கரிக்கக்கூடாது என்று சொன்னதோடு கமிஷனில் சாட்சி சொல்லவும் ஒத்துழைக்கவும் தீர்மானங்கள் செய்தும் யாதாஸ்த்து தயார்செய்தும் அனுப்பிவிட்டன. திருவாளர்கள் எம். கே. ஆச்சாரியார், சத்தியமூர்த்தி சாஸ்திரியார் போன்ற "பிரபல தேசீய வாதிகள்" எல்லோரும் அதில் அங்கத்தினர்களாகவும் தலைவர்களாகவும் தான் இருந்து வருகின்ற சபைகளாகவே அவைகள் இருக்கின்றன.

தவிர 'முதல் வகுப்பு தேசியத் தலைவர்'களான திருவாளர்கள் விஜயராகவாச்சாரியார், ஸ்ரீனிவாசய்யங்கார், எ. ரங்கசாமி அய்யங்கார் முதலியோர்களும் தங்கள் யாதாஸ்த்தை தனியாக அச்சுப்போட்டு சைமன் கமிஷனுக்குபோய் சேரும்படி செய்தாய் விட்டது. அவைகள் கடைகளிலும் விற்க ஏற்பாடு செய்தாய் விட்டது. திருமதி பெசண்டம்மையார் கூட்டமும் தங்களது யாதாஸ்தை பகிரங்கமாகவே ஒப்படைத்தாகிவிட்டது.

இனி பகிஷ்காரம்செய்திருக்கின்றவர்கள் யார் என்று பார்ப்போமானால் மேல்கண்ட கூலிப்பிரசாரக்கூட்டத்தைத் தவிர வேறில்லை என்பது புலனாகும். அவர்களும், யார் பகிஷ்காரம் செய்யாததற்காக வைகின்றார்கள் என்று பார்ப்போமானால், பார்ப்பனரல்லாதார் கட்சியார்களை மாத்திரம்தான் என்பது வெளியாகும். எனவே, இவ்வித கூலி பகிஷ்காரக்கூச்சலுக்கு இடம் கொடுக்காமலும் அதைக்கண்டு பயந்துவிடாமலும் இருக்கும்படி பார்ப்பனரல்லாத மக்களுக்கு எச்சரிக்கை செய்கின்றோம்.

இன்னும் ஒரு லோக குரு அவதாரம்.

நமது நாட்டில் பார்ப்பனர்கள் ஆதிக்கத்திற்காக அவதரித்த லோககுருக்கள் அநேகர் என்பது யாவரும் அறிந்த விஷயம். அவர்களால் ஏற்பட்டிருக்கும் தொல்லைகளும் நமது சுயமரியாதைக்கு இடையூறுகளும் நமது சீர்திருத்தத்திற்கும் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டைகளும் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. இவ்வளவும் போதாமல் திருமதி பெசண்டம்மையார் அவர்களால் சுமார் 20, 30 வருஷங்களாக "லோககுரு வருகிறார்! லோக மாதா வருகின்றார்" என்பதாக கூப்பாடுபோடப்பட்டு வந்து, அநேக டாக்டர் பட்டம் பெற்றவர்கள் பி. ஏ., எம். ஏ., பட்டம் பெற்றவர்கள் முதல் நம்பச்செய்து இரவும் பகலும் எதிர்பார்த்து திடீரென்று சீமையில் திரு. கிருஷ்ணமூர்த்தி என்ற வாலிபர் லோககுருவாகவும் திருமதி அருண்டேல் ருக்மணி அம்மாள் என்கின்ற ஒரு அம்மையார் லோகமாதாவாகவும் அவதாரம் செய்து உலகோர்கள் ஒப்புக்கொண்டதாகவும் ஏற்பாடு செய்யப்பட்டு ஒருபக்கத்தில் 'உலகாக்ஷிப்பு' நடந்து வருகின்றது.

இவ்வளவும் போதாமல் நமது திரு. திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் தமது தவத்தால் இன்னும் ஒரு லோக குரு அவதாரம் செய்யப்போவதாய் திருநெல்வேலியில் 8-7-28 தேதி வெளியாக்கி விளம்பரப்படுத்தி யிருக்கின்றார். ஆனால் அந்த லோக குரு அவதாரம் செய்யப்போவதற்கு அப்போது அவர் சொன்ன காரணம்தான் மிக வெட்கக்கேடானது என்று சொல்லுவோம். என்னவென்றால் மக்களுக்கு கடவுள் எண்ணம் மறைந்துபோன காலத்தில் கடவுள் அவ்வெண்ணத்தை உண்டாக்க அவதாரம் செய்வது எப்போதும் வழக்கமாம். அதுபோலத்தான் முன்பு ஒருகாலத்தில் சமணர்களால் கடவுள் எண்ணம் மக்களுக்குள் மறைபட்டிருந்தகாலத்தில் திருஞானசம்மந்தரென்கின்ற பார்ப்பனர் தோன்றி, தனது மூன்றாவது வயதிலேயே, சமணர்களை வென்று, அவர்கள் தத்துவங்களை அழித்து, கடவுள் பெருமையைக் காட்டி, மக்களை மோக்ஷமடையும்படி செய்தாராம். "அதுபோலவே இப்போது .... என்பவரால் மக்களுக்குள் கடவுள் எண்ணம் மறைபட்டுவருவதால் அதை ஒழித்து அவனை வாதில் வென்று மக்களுக்கு கடவுள் எண்ணத்தை ஊட்டி மோட்சம் கொடுக்க ஒரு லோக குரு அவதரிக்கப் போகின்றார்; அவர் தயாராயிருக்கின்றார்; எல்லோரும் தவம் கிடங்கள்" என்று பேசியிருக்கின்றார். அந்த லோககுரு இனிமேல் பிறக்கப் போகின்றாரோ அல்லது திரு. கிருஷ்ண மூர்த்தி லோக குரு ஆய்விட்டதுபோல் நமது திரு திரு. வி. கல்யாண சுந்தரரே லோக குரு ஆய்விடுவாரோ, அல்லது நமது சுந்தரராலேயே யாராவது காட்டப்படுவாரோ அறிகிலோம்.

பத்து அவதாரங்களும், பன்னிரண்டு ஆழ்வார்களும், நான்கு சமய குரவர்களும், அறுபத்து மூன்று நாயன்மார்களும் அவதரித்து வெகு காலமாக யாரும் அவதரிக்கவே இல்லை என்பது யாவரும் அறிந்ததே. இதற்குக் காரணம் உலகம் க்ஷேமமாய் நீதியாய் சத்தியமாய் நடந்து வந்ததாலோ அல்லது யாராவது 144 போட்டு தடுத்துவிட்டதாலோ என்பது நமக்கு விளங்கவில்லை. ஆகிலும் நமது முதலியார் அவர்கள் தவத்தால் இப்போதாவது கடவுளை உணர்த்த ஒரு அவதாரம் வரப்போவதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி எய்துகிறோம். ஆனாலும் நமக்கு இதில் ஒரே ஒரு சந்தேகம் தோன்றுகின்றது. அதாவது கடவுள் உணர்ச்சி மறைந்த மக்களுக்கு ஒரு சமயம் கடவுள் ஒரு அவதாரம் அனுப்பித் தன்னை வெளிப்படுத்திக்கொள்வதைவிட கடவுள் தானாகவே மக்கள் மனதில் வெளிப்படும்படி செய்துகொள்ள முடியாதா என்பதுதான். இதற்கு ஒரு கதை உண்டு. அதாவது ஒரு ஊரில் ஒரு பிள்ளையார் கோவில் இருந்தது. அந்தக் கோவிலின் மேடையில் ஒரு ராமசாமி பிள்ளையாருக்கு நேரே காலை நீட்டிப் படுத்துக்கொண்டிருந்தான். இதைப்பார்த்து பிள்ளையாருக்கு மிகவும் அவமானம் ஏற்பட்டுத் தன்னை வெகு பக்தியுடன் பூசை செய்யும் ஒரு கல்யாணசுந்தரக் குருக்களைக்கூப்பிட்டு "ஓ குருக்களே! இந்த ராமசாமியை காலை எடுத்து அப்புறம் வைத்துக்கொள்ளச் சொல்லுகின்றாயா? அல்லது உன் கண்ணை பொட்டை ஆக்கட்டுமா" என்று கேட்டதாம். அந்தக் குருக்கள் பிள்ளையாரைப் பார்த்து "என் கண்ணைப் பொட்டை ஆக்க சக்தி உள்ள பிள்ளையாரே! அவன் காலை முடமாக்கிவிட்டாலும் சற்றுமடக்கச் சொல்லக்கூடாதா" என்றுகேட்ட [illegible]மையில்லாமல் ராமசாமியின் காலை ஒடுக்கும்படி தவம்செய்தாராம். அதுபோல் இருக்கின்றது நமது திரு. முதலியார் அவர்கள் வெளிப்படுத்தும் அவதார மகிமை.

தொழிலாளர்.

தென்னிந்திய ரயில்வே தொழிலாளர்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லவும், அதை நிவர்த்திக்கத் தாங்கள் கொண்டுள்ள முறைகளுக்கு ஆதரவு தேடவும், ஊர் ஊராய் பிரசாரம் செய்து வருகின்ற விஷயம் யாவரும் அறிந்ததே. இம்முயற்சிக்கு ஆங்காங்குள்ள பொதுமக்கள் ஆதரவு கொடுக்கவேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகின்றோம். தாடியில் நெருப்புப் பற்றி எரிகின்றபோது ஒருவன் அதில் சுருட்டுப் பற்றவைக்க கொஞ்சம் நெருப்புக் கேட்டதுபோல் நாட்டின் ஜீவநாடியாகிய தொழிலாள மக்கள் இம்மாதிரி வேதனைப்பட்டு அழுகும்போது சைமன் - கமிஷன் பிரசாரமும் பர்டோலி சத்தியாக்கிரகத்திற்கு பணம் தண்டலும் வெகு மும்முரமாய் நடந்து வருவதிலிருந்து நாட்டின் ஏழை மக்களிடத்தில் 'தேசிய' இயக்கங்களுக்கோ 'தேசியத் தலைவர்கள்' என்போர்களுக்கோ எவ்வளவு கவலை இருக்கின்றது என்பதும் அவைகளால் நாட்டிற்கு எவ்வளவு பலன் ஏற்படும் என்பதும் தானாகவே விளங்குகின்றது. இனியாவது பொது மக்கள் இம்மாதிரி போலியும் அவசியமில்லாததுமான காரியங்களில் போலித் தலைவர்களை நம்பி மோசம் போகாமல் முக்கியமான காரியங்களில் கவனம் செலுத்த வேண்டுமாய் வேண்டுகிறோம்.

புராணங்கள்.

அடுத்தவாரம் முதல் கொண்டு 'இதிகாசங்கள்' என்பது போலவே 'புராணங்கள்' என்னும் தலைப்பின் கீழ் புராணக் கதைகளின் யோக்கியதைகளைப்பற்றி வாராவாரம் எழுதிவருவதாக ஒரு அறிஞர் முன்வந்திருக்கிறார். ஆதலால் அதற்காக ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டு வெளியிடப்படும். வாசகர்கள் கவனமாய் படித்து உணரவேண்டுமாய் வேண்டுகின்றோம்.

திரு நாயக்கர்

ஜூலை மாதம் 15-ந் தேதிவாக்கில் திரு நாயக்கர் கொடைக்கானலிலிருந்து ஈரோட்டிற்கு பிரயாணமாகி விடுவார். இனி நாயக்கருக்கு எழுதும் கடிதங்களை ஈரோட்டிற்கு எழுதவேண்டுமாய் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நாடார் மகாநாடு.

அருப்புக்கோட்டையில் நாடார் சமூக மகாநாடு சென்றவாரம் 4, 5, 6 தேதிகளில் மிகவும் விமரிசையாக நடந்தேறிய விபரங்களை மற்ற பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் விஷயங்களிலிருந்து அறியலாம். சமூக மகாநாட்டைத் திறந்து வைத்த டாக்டர், சுப்பராயன் அவர்கள் வகுப்பு மகாநாடுகளின் அவசியம் என்றதுபற்றியும் ஒவ்வொரு வகுப்பும் முன்னேறினால்தான் நாடு விடுதலையடையமுடியும் என்றதுபற்றியும் இந்த விஷயங்களை வெற்றிபெற தன்னால் கூடியதை செய்யக்காத்திருப்பதாக வாக்களித்ததைப் பற்றியும் நாம் மிகுதியும் பாராட்டுகின்றோம்.

மகாநாட்டு அக்கிராசனர் திரு. கனகசபை-நாடார் அவர்கள் தமது அக்கிராசனப்பிரசங்கத்தில் குறித்துள்ள பல விஷயங்கள் பொன்னேபோல் போற்றத் தக்கன.

"நாம் பல துறைகளிலும் சிறப்புப்பெற்றிருந்தும், நமது போக்கிதைக்கு தகுந்த கவுரவம் நமக்கு அளிக்கவில்லை; பகிரங்கமாய் அவர்கள் (பிறவகுப்பார்கள்) கூறிவரும் கொள்கைகள் யாவையாயிருப்பினும் சரி, பொது கூட்டங்கள் மூலமாயும் பத்திரிகை மூலாகவும் அவர்கள் கூறும் செய்திகள் எவையாயிருப்பினும் சரி, காரியத்தில் மாத்திரம் ஒவ்வொரு வகுப்பினரும் தாங்கள் விட்டுக் கொடுக்காது வெகு ஜாக்கிரதையாக இருக்கின்றார்கள்."

"ஒரு சிறு பான்மையோர் தாங்கள் ஏதோ மேற்குலத்தவர் என்பதை ஆதாரமாகக்கொண்டு எல்லா உரிமைகளையும் கவர்ந்து லக்ஷக்கணக்கான மற்றையோரைத் தாழ்மையாக நடத்தி அவர்களை விரோதம்கொள்ளுவது முறையா? இது நியாயமா? தேசத்தின் பொது நலத்திற்கு இது சாதகமாகுமா?"

"இந்தியர்களுக்கு நெட்டாலிலும் கேப்காலனியிலும் நடக்கும் கொடுமைகளை நாம் வெகுவாகக் கண்டிக்கின்றோம். ஆனால் நாமோ இவைகளிலும் மேம்பட்ட குற்றம் செய்கின்றோம் என்பதை மறக்கவோ அல்லது அசட்டை செய்யவோ செய்கிறோம்."

"இந்தியர்களுக்குச் சமத்துவம் அளிக்கப்படவில்லை என்றும் முழுதும் ஆங்கிலேயர் நிறைந்த ஒரு கமிஷன் அனுப்பப்பட்டிருப்பது இந்தியாவை அவமதித்ததாகுமென்றும், ஆகையால் அந்த கமிஷனை பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்றும் தீர்மானம் செய்யும் நம் தேசத்தாரில் சிலர் தங்கள் சகோதரர்களுக்கே சமத்துவம் இல்லையென்று மறப்பது என்ன விந்தை? நமக்குள் இருக்கும் பல ஜனசமூக வித்தியாசங்களையும் வேற்றுமைகளையும் களைந்தெறிந்தாலல்லாமல் நமது தேசத்தின் முன்னேற்றத்தில் நாம் அவாவுறுவது நியாயமன்று. இதற்கிடையில் எவ்வித நல் முயற்சிகள் செய்யப்பட்டிருப்பினும் அவைகள் வீண் முயற்சிகளேயாகும்."

இன்னுமின்னபல அருமையான வாக்கியங்கள் நிகழ்கின்றன. தேசிய வாதிகள் என்போர்களையும் சுயராஜ்ய வாதிகள்

என்போர்களையும் இவற்றிற்கு 'என்ன சமாதானம் சொல்லுகின்றீர்கள் என்று கேட்கின்றோம். இதிலிருந்து தேசியம் என்பதும் கமிஷன் பஹிஷ்காரம் என்பதும் எவ்வளவு புரட்டும் சுய நலமும் கொண்டது என்பது யாவருக்கும் வெட்ட வெளிச்சமாயிருக்குமென்றே நினைக்கின்றோம். அன்றியும் அம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் பல மிகவும் குறிப்பிடத்தக்கனவும் பாராட்டத்தக்கனவுமாகும்.

அவையாவன:—

கல்யாணகாலங்களில் வீண் செலவுகளும் அனாவசியமான சடங்குகளும் இல்லாமல் ஒரே நாளில் திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்றும், சடங்குகளிலும்கோவில்களிலும் நாடார் வகுப்பார்களையே கொண்டு முறையே சடங்கு பூசைமுதலியவைகள் நடத்திக் கொள்ள வேண்டும் என்றும்,

ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப்புக்காக ஒரு லக்ஷ ரூபாய் சேகரிக்க லாட்டரி சீட்டு போடவேண்டும் என்றும், நாடார் காலேஜ் என்பதாக ஒரு காலேஜ் ஏற்படுத்த வேண்டும் என்றும்,

தென் இந்திய ரெயில்வே தொழிலாளர் கஷ்டத்திற்கு அனுதாபப் படுவதாகவும், அவர் நடத்தும் சத்தியாக்கிரகத்தை ஆதரிப்பதாகவும் இன்னும் இது போன்ற பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன.

அன்றியும் இத்தீர்மானங்களை அமுலுக்கு கொண்டு வருவதற்கு தக்க கனவான்கள் இவ்வருஷ நிர்வாக சபைக்குத் தெரிந்தெடுக்கப் பட்டிருப்பதானது மற்றொரு விசேஷம் என்றே சொல்லவேண்டும். அதாவது பொறையார் திரு. வி. கனகசபை நாடார்அவர்கள் அக்கிராசனராகவும், விருதுபட்டி திரு. செந்தில்குமார நாடார் அவர்கள் உப அக்கிராசனராகவும், திருவாளர்கள் பட்டிவீரன்பட்டி சட்டசபை மெம்பர் டபிள்யூ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் கூ. சா. பி. பெரியதம்பி நாடார் ஆகிய கனவான்கள் காரியதரிசிகளாகவும் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர். ஏற்றபடி நடைமுதல் வருஷத்திற்கு அச்சங்க வேலைகள் நாடார் சமூகத்திற்கு மாத்திரமல்லாமல் இதர சமூகத்திற்கும் பலனளிக்கத்தக்க அனேக முற்போக்கான வகையில் நடைபெறுமென்றே எதிர்பார்க்கின்றோம். தற்காலம் நமது தென்னாட்டில் உள்ள பல சமூகங்களில் நாடார் சமூகமே தக்க அளவுக்கு முற்போக்கடைந்தும் பொதுக்காரியங்களில் பகுத்தறிவை உபயோகித்து தக்கது செய்வதுமான காரியங்களில் தலையிட்டிருக்கிறார்கள் என்று சொல்வது மிகையாகாது. சாதாரணமாக நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் இது போலவே முற்போக்கடைந்து வருகின்றார்கள், என்றாலும் அவர்கள் பணம் சம்பாதிப்பதில்மாத்திரம் பகுத்தறிவை உபயோகித்து எப்படியாவது சம்பாதிக்கப் பழகி இருக்கின்றார்களேயல்லாமல் இப்படி சம்பாதிக்கிற பணத்தைச் சரியான வழியில் செலவு செய்யப் பழகவில்லையென்றே சொல்லவேண்டும். அதாவது பாறைக் கற்களில் இறைத்து கோவில்களை கட்டுவதும், வாகனங்கள் செய்வதும், உற்சவம் செய்வதும், பார்ப்பனர்களுக்கு இறைப்பதும், வேத பாடசாலை, சமஸ்கிருத பாடசாலை என்பது போன்ற பிச்சை எடுப்பதற்கு மாத்திரம் உபயோகப்படும்படியானதும், அதுவும் ஒரு கூட்டத்திற்கே பயன் படுவதும், எந்தக்கூட்டத்தாரிடம் இருந்து கொள்ளை கொள்ளையாய் இப்படி பணம் சம்பாதிக்கிறார்களோ அந்தக்கூட்டத்தார்களுக்கு ஒரு பைசாவும் உபயோகப்படாததும் தங்கள் சமூகத்திற்கும் உபயோகப்படாததுமான ஸ்தாபனங்களுக்குக் கொடுப்பதிலும்வீணாக இறைத்து வருகிறார்கள்.

ஆனால் நாடார் சமூகத்தார்களோ இவர்களைப்போல் 'அவ்வளவு கடுமுறைகளாலும் கொள்ளை கொள்ளையாயும் சம்பாதிக்கா விட்டாலும், சம்பாதித்த பணத்திலிருந்து பள்ளிக்கூடம் கட்டுவதும், அரைச் சம்பளத்திலும், கால் சம்பளத்திலும், சம்பளமில்லாமலும் பிள்ளைகளுக்குப படிப்புச் சொல்லிக் கொடுப்பதும் அப்படியே எல்லா வகுப்பாருக்கும் உபயோகப்படும்படியாக எல்லா வகுப்புபிள்ளைகளும் சம்பளமில்லாமல் படிக்க இடம் செய்திருப்பதும் ஆன காரியங்களில் செலவு செய்துவருகின்றார்கள். இதிலிருந்து நாட்டுக்கோட்டை நகரத்தார் தாங்களும் பள்ளிக்கூடம் கட்டவில்லையா என்று கேட்கலாம். ஆனால்அது அவர்கள் வீணுக்கிறைக்கும் பணத்தில் நூற்றில் ஒரு பங்கு என்று கூட சொல்ல முடியாது. இந்நாடார் வகுப்பார்களுக்கு இவ்வளவுபலன் தரத்தக்க வேலை செய்ய இடமேற்பட்டதற்குகாரணம் எதுவெனில், நமது நாட்டின் நற்காலத்தின் பயனாக நாடார் வகுப்பார்கள கல்லுச் "சாமி" இருக்கும் கோவில்களுக்குள் நுழைந்து மூடர்களாகாமல் உயிர்ச் "சாமிகள்" இருக்கும் கோவில்களில் நுழைந்து அவைகளுக்குத் தொண்டு செய்யும்படியான நிலைமை ஏற்பட்டதற்குக் காரணத்தினாலே அவர்களுக்கு ஏற்பட்டதே தான் முக்கிய காரணம் என்போம்.

நிற்கமேல்படி மகாநாட்டை ஒட்டி நாடார் வாலிப நாடு ஒன்றும் தொழிலாளர் மகாநாடு ஒன்றும் நடைபெற்றது, வாலிப மகாநாட்டில் தலைமை வகித்த திருவாளர் திரு. கல்யாண சுந்தர முதலியார் அவர்கள் புராணத்தைப்பற்றிய விளம்பரங்களுக்கே அத்தலைமை ஸ்தானத்தை உபயோகித்துக் கொண்டார் என்று சொல்லுவது மிகையாகாது. எனவே அத்தலைமை உபந்யாசத்தைப்பற்றி மற்றொரு சமயம் ஆராய்வோம். நிற்க

தொண்டர் மகாநாட்டில் தலைமைவகித்த திரு.ஈ.வெ. ராமசாமிநாயக்கரின் தலைமைஉபந்யாசம் அங்கு கூடியிருந்த மக்களுக்கு ஒரு புதிய உணர்ச்சியையும் புதிய உலகத்தையும் உண்டாக்கிற்று என்று சொல்லலாம். அது மிகுதியும், மூட நம்பிக்கைகளை ஒழிப்பதும், சுயமரியாதையைப்பெறுவதும், மக்களுக்குத் தொண்டுசெய்வதுமே மனிதப்பிறவியின் பயன் என்பதுமான கொள்கைகளையே வற்புறுத்தியதாயிருந்தது. மேற்படி அம்மகாநாடு நடந்த பெருமையும் ஒழுங்கும் பிரதிநிதிகள் வந்த கூட்டமும் பிரதிநிதிகளுக்குச்செய்த வசதிகளும் உபசாரங்களும் இது வரை நமது நாட்டில் நடந்த மகாநாடுகளில் சுமார் இரண்டொன்றைத் தவிர வேறு எங்கும் இதுபோல நடந்திருக்காது என்றே சொல்லுவோம். முடிவாக இம்மகாநாட்டின் பெருமைகளைப்பற்றி சந்தோஷப் பட்டுக் கொண்டிருக்காமல் அடுத்த வருஷத்திற்குள்ளாகத் தீர்மானங்கள் அமுலுக்கு வரத்தக்க முன்னேற்றத்திற்கான வேலைகளை நடத்திக் காட்டவேண்டுமாய் நிர்வாக கனவான்களைக் கேட்டுக்கொண்டு இத் தலையங்கத்தை முடிக்கின்றோம்.

சுயமரியாதை திருமணம்.

இன்று 5-7-28 காலை நெல்லிக்குப்பத்திற்கு திரு. தண்டபாணிபிள்ளை வந்து சேர்ந்தார். அவரை திரு. முத்துக்குமாரசாமி பாவலர் ஸ்டேஷனில் எதிர்கொண்டழைத்து தமது திருமணத்தை முடித்து கொடுக்கும்படி வேண்டிக்கொண்டனர். திரு. பிள்ளையும் சைவ முறைப்படி தமிழிலேயே மணமந்திரங்கள் பூராவையும் சொல்லி சிறப்பாக திருமணத்தை முடித்து மணமக்களை ஆசீர்வாதம் செய்தார். இப்புதிய முறையைக் கவனிக்க மற்றக் கல்யாண வீடுகளிலிருந்தும் சுமார் 1000 பேருக்குமேல் வந்துகூடியிருந்து பார்த்து சந்தோஷப்பட்டனர். மாலையில் கவாய் திரு. சே. டி. நடராஜம்பிள்ளை அவர்கள் சங்கீதக் கச்சேரி வெகு இனிமையாய் நடைபெற்றது. திரு. தண்டபாணி பிள்ளை ஒருமணிநேரம் 'தமிழர் திருமணம்' என்றதைப்பற்றி அழகாகப் பேசினார். இரவு 10 மணிக்கு மேற்படி இருவரும் தமது நண்பர்களுடன் தனிமோட்டாரில் புதுச்சேரி மார்க்கமாக 125 மைல் தூரமுள்ள சென்னைக்குப் புறப்பட்டுமறுநாள் காலையில் சென்னை வந்து சேர்ந்தனர்.

நமது நிரூபர்

மதுரையில்

ஓர் நல்ல வீடு

விற்பனைக்கு வருகிறது.

மதுரை வடக்குச் சித்திர வீதி ஒக்கூர் லக்ஷ்மண செட்டியார் பாடசாலைக்குச் சமீபத்தில், மதுரை இம்பீரியல் சினிமா புரோப்புரைட்டர் ஜி. எஸ். ஜகபதி நாயுடு அவர்கள் வீடு செட்டிநாடு கட்டிடம் கோவிலுக்குச் சமீபத்தில் இருப்பதால் வியாபாரத் தொழிலாளிகளுக்கு மிகவும் வஸதியாயுள்ளது, விடுதிசகாகவும் உபயோகப்படுத்தலாம்.

மற்ற விபரங்களுக்கு கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதிதெரிந்து கொள்ளவும்.

ராவ்சாஹிப் எம். அப்பாய் நாயுடு,
ஜில்லா போர்டு வைஸ் பிரசிடெண்டு,
மதுரை.

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

க்கிறது. இதற்குக்காரணம் பொதுமக்கள் தம் மனதில் இவ்விஷயங்களை ஆராய்ச்சி செய்து தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை ஏற்படுத்திக் கொள்ளாததேயாகும். நமக்குள்ளிருக்கும் பல ஜனசமூக வித்தியாசங்களும் வேற்றுமைகளும் களைந்தெறியப்பட்டாலன்றி நமது தேசத்தின் முன்னேற்றத்தில் நாம் அவாவுறுவது நியாயமன்று. இதற்கிடையில் எவ்வித நன்முயற்சிகள் செய்யப்படினும் அவைகள் வீண் முயற்சிகளே ஆகும். சரித்திரங்களில் நான் கூறுவதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. ஜப்பான் தேசத்தின் சரித்திரத்தை நாம் படிப்போமாயின் நான் கூறுவது அனைத்தும் நியாயமென்று தெரியவரும். அந்த தேசத்தில் சமூதாயச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டபிறகே அந்நாடு முன்னேற்றமடைந்தது.

ஜாதி வகுப்பு என்ற வித்தியாசங்களைக் கொண்டு ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை அலக்ஷியமாக நடத்தி வருவது இந்து மதத்திற்கே ஒரு அவமதிப்பாகும். பொருளற்ற இவ்வேற்றுமைகள் இருந்து வருமாயின் நமது தேசத்தில், ஒற்றுமையும் ஐக்கியமும் ஏற்படுவது அசாத்தியம். ஒரு சிறுபான்மையோர் தாங்கள் ஏதோ மேல் குலத்தில் உதித்தவர் என்பதை ஆதாரமாகக் கொண்டு எல்லா உரிமைகளையும் கவர்ந்து லக்ஷக்கணக்கான மற்றையோரைத் தாழ்மையாக நடத்தி, அவர்களை விரோதங்கொள்வது முறையா? இது நியாயமா? தேசத்தின் நலத்திற்கு இது சாதகமாகுமா? தன்னுள் ஒற்றுமையற்ற ஒரு குடும்பம் நிலைநிற்காது. தாழ்ந்த வகுப்பினர்களும் அவயவங்களிலும், ரூபத்திலும் நம்மை ஒத்தவர்களே. சட்டத்திற்கு முன்பு நாம் சமத்துவம் கேட்கிறோம். இந்தியர்களுக்கு நெட்டாலிலும், கேப் காலனியிலும் நடக்கும் கொடுமையை நாம் வெகுவாகக் கண்டிக்கிறோம். ஆனால் நாமோ இவைகளிலும் மேம்பட்ட குற்றம் செய்கிறோம் என்பதை மறக்கவோ அல்லது அசட்டையோ செய்கிறோம். நமது தேசத்தில் சிறந்த புதல்வர்களில் ஒருவரும் பெரிய ரஸாயன சாஸ்திரியுமான ஸா. பி. சி. ரே. என்பவரால் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு கூறப்பட்டவை எனினும் தற்காலத்திற்கு எவ்வளவு பொருத்தமுடையனவாயிருக்கின்றன. இந்தியர்களுக்குச் சமத்துவம் அளிக்கப்படவில்லையென்றும்; முழுதும் ஆங்கிலேயர் நிறைந்த ஒரு கமிஷன் இந்தியாவிற்கு அனுப்பப்படுவது இந்தியாவை அவமதித்ததாகுமென்றும், ஆகையால் அதைப் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்றும் தீர்மானம் செய்யும் நம் தேசத்தாரிற் சிலர் நம் சகோதரர்களுக்கே சமத்வம் இல்லையென்று மறுப்பது என்ன விந்தை? ஜாதி வகுப்பு வித்தியாசங்களைக் கொண்டு ஏற்றத்தாழ்வு கொண்டாடுபவர் நான் மேற்கோளாகக் காட்டியுள்ள வார்த்தைகளைக் கவனிப்பார்களாக. சட்டவரம்புக்குட்பட்டதாய் நாம் இதுவரை நடத்தி வந்திருக்கும் முறைகளை அனுசரித்து கிளர்ச்சிகளை மட்டும் நாம் இனியும் நடத்தி வருவோமாயின் நமக்கு நலமேற்படுமென்று எனக்கு முழு நம்பிக்கையுண்டு.

தேசீயவாழ்வில் நமக்குரிய ஸ்தானத்தை வகிப்பதற்கு நாம் அவாவுறுகின்றோமாதலின் அதற்கு யாதொரு விரோதமும் வேண்டுவதில்லை. ஆனால் உங்களுக்கு நான் ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். நமக்குரிய பாத்தியதைகளை வற்புறுத்தும் பொருட்டுப் பிறர் நம்மீதுகொண்டிருக்கும் நல்லபிப்பிராயத்தை கெடுப்பதும் நியாய விரோதமுமான முறைகளை அனுசரிப்பதும் எனக்குச் சற்றும் விருப்பமில்லை. இவ்விதக் கூட்டங்களில் தலைமை வகித்துப்பேசிய கனவான்கள். வியாபாரத்திலும் கைத்தொழிலிலும், நீங்கள் பெற்றிருக்கும் சீரையும் பொதுக் காரியங்களில் கொண்டுள்ள சிரத்தையையும் அபிமானத்தையும் இன்னும் பல குணங்களையும்பற்றி வெகுவாய் புகழ்ந்து பேசியிருப்பதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் என் பிரசங்கத்தில் உங்கள் விசேஷங்களைப்பற்றி அதிகம் நான் கூறவில்லை. உங்கள் பெருமையைக் குறைவுபடுத்த வேண்டுமென்ற அலக்ஷிய நோக்கத்தோடு நானிவ்வாறு செய்வதாகக் கொள்ளலாகாது. ஆனால் நாம் ஏற்கெனவே அடைந்திருக்கும் சிறப்பைக் கருதிப் பெருமையடைவதைக்காட்டிலும் மேன்மேலும் விருத்தியாவதற்கு எத்துறைகளில் முயற்சி செய்யலாம் என்று யோசிப்பது நலமென்று எனக்குத் தோன்றுகிறது. வியாபாரத்திலும் விவசாயத்திலும், முன்னேற்றமடைந்த ஒரு வகுப்பினரென நமக்குப் பெருமை ஏற்பட்டிருக்கிறது. நாம் ஏற்படுத்தியிருக்கும் பல ஸ்தாபனங்களைக் குறித்தும், நாம், வெகுவாகப் பாராட்டுகிறோம். நாணயச் சங்கம் ஒன்று ஸ்தாபித்திருப்பதைக் குறித்து நாம் மதிப்படைகின்றோம். ஆனால் நம்முடைய வகுப்பின் நலத்திற்காக வென்று அமைக்கப்பட்டிருக்கும் இவைகள் பூர்த்தியான வளர்ச்சி பெற்று விட்டனவென்று நாம் கருதலாகாது. நம்மக்களனைவருக்கும் இவைகளைப்பற்றி ஊக்கம் அதிகப்படும்படி நாம் பிரசாரம் செய்ய வேண்டும். பிரசார வேலையை நீங்கள் நிறுத்தி விட்டதைக் குறித்து நான் மனதில் கவலையும் அடைகிறேன். இவ்வாறு நீங்கள் என் முடிவிற்கு வந்தீர்களென்பதற்கு இங்கு நான் நியாயம் ஆராயவில்லை. ஆனால் காரணம் ஏதாயிருப்பினும் சரி இவ்வாறு நாம் பிரசார வேலையை நிறுத்துவோமாயின் நாளடைவில் நமது சங்கத்தின் வாழ்விற்கே கேடாகும். சங்கங்களின் வாழ்வோ, தாழ்வோ பிரசார வேலையை பொறுத்தாயிருக்கின்றது. நமது சட்டசபைத் தேர்தலில பிரசார வேலை எவ்வளவு சாதகமாயிருந்தது என்பதை நீங்கள் நினைத்துப் பாருங்கள். நம் வகுப்பினருள் ஒற்றுமை விருத்தியாகி, அங்கத்தினருக்குள் ஐக்கியப்பான்மை அதிகரித்து, நமது ஸ்தாபனங்கள் மேன்மேலும் பலமடைவதற்கு வெகு தீவிரமான பிரசார வேலை அவசியம் நடைபெற வேண்டுமென்று நான் உங்களுக்கு வற்புறுத்துகின்றேன். பிரசார வேலை நன்கு நடைபெறுவதற்கான சில குறிப்புகளை நான் நாளைப்பிரசங்கத்தில் கூறஉத்தேசித்திருக்கிறேன்.

நமது தேசத்திற்கு நாம் செய்ய வேண்டிய கடமையை மறக்கலாகாது. நமதுவகுப்புக்கான விஷயங்களைக் காட்டிலும் தேசத்தின் முன்னேற்றத்திற்கான விஷயங்களே அதிக அவசியமானவை. இந்தியாவின் தேசீய வாழ்வின்முன்னேற்றம் நமது கிராமவாசிகளாலேயேதான் ஏற்படவேண்டும். சில வாரங்களுக்கு முன்பு மைசூர் சமஸ்தான மந்திரி அந்த சட்ட சபை அங்கத்தினர்கள் முன்பு செய்த ஒரு பிரசங்கத்தில் அந்த ராஜ்யத்தின் அவாவைப்பின்வருமாறு வெளியிட்டுள்ளார்:—மைசூர் சமஸ்தானத்திலுள்ள சிறியதும் பெரியதுமான எல்லா கிராமங்களிலும் அவைகள் நலத்திற்கான ஏதுக்களை அமைத்தாலன்றி தமது கடமையைச் செய்து முடித்ததாகக் கருத முடியாது. கோடை காலத்தில் வறண்டு போகாத ஒரு குடி தண்ணீர்க்கிணறும், நல்ல ஸ்திதியில் மராமத்து செய்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு குளமும், தேர்ச்சி பெற்ற ஒரு உபாத்தியாயரோடாவது கூடிய ஒரு பள்ளிக்கூடமும், நன்கு நடைபெறும் ஒரு ஐக்கிய நாணயச்சங்கமும், போதுமான அளவு மருந்துகளோடு கூடிய ஒரு வைத்தியசாலையும் இல்லாத கிராம மொன்றும் இருத்தலாகாது. இவர் கூறியுள்ள வற்றில் ஒன்றும் வீணானது அல்ல. அவர் கூறிய வற்றோடு நான் இரண்டு விஷயங்கள் சேர்க்க விரும்புகிறேன். முதலாவது ஒரு வாசகசாலை; இரண்டாவது நமது சங்கத்தின் கிளை ஒன்று. இவைகளனைத்தும் அமைந்துள்ள கிராமங்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகப்படுகின்றனவோ? அவ்வளவிற்கவ்வளவு நமது தேசம் முன்னேற்றம் அடையும். நமதுவகுப்பினர் பெரும்பான்மையாய் வசிக்கும் எவ்வளவோ கிராமங்களில் இவ்வசதிகள் உள்ளன? அரசாங்கத்தாரிடமிருந்து நமதுகிராமநிர்மாண வேலைக்கான அதிக உதவியை நாம் எதிர்பார்ப்பது நியாயமாகாது. ஜனசமூக காரியங்களில் அபிமானம் மிகுதி கொண்டவர்களும் சமூதாய விஷயங்களை ஏற்பாடுசெய்வதில் மிகுந்த ஊக்கமுடையவர்களுமான நாம் இவ்வேலையை மேற்கொண்டு தேசத்திற்கு பாடுபடல் வேண்டும். பிரதமப்பாடசாலைகளும் உயர்தரப்பாடசாலைகளும் நாம் அநேகம் ஸ்தாபித்துள்ளதாலும் ஒரு கல்லூரி ஸ்தாபிக்க உத்தேசித்திருப்பதாலும் மட்டும் நம்முடைய ஜனங்களின் கல்வியபிவிருத்திக்கான எல்லா வசதிகளும் செய்து விட்டோம் என்று மனதில் எண்ணலாகாது. பாமர ஜனங்களுக்கும் கல்வியபிவிருத்தி ஏற்படவேண்டியது அவசியம், ஏனெனில் பொதுமக்களின் ஆட்சியும், சமூதாயச் சீர்திருத்த முயற்சிகளும், கல்லாமை நீங்கி கல்வியபிவிருத்தியாலன்றி பயனிலவாகும். பொதுவாகக் கூறுமிடத்து ராஜ்ய விஷயங்களில் தோன்றும் அநேக தீமைகளுக்கும் கேடுகளுக்கும் கல்லாமையே முக்கிய காரணமாகும். தேர்தல் காலங்களில் காணப்படும் பல தீமைகளும் அறவே ஒழிய வேண்டுமாயின்

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

பட்டு மீட்டிங்குக்கு திரு. நாயக்கரும் தலைவர்களும் அழைத்துச் செல்லப்பட்டார்கள். கடைவீதியில் ஒரு அகண்ட இடத்தில் மீட்டிங்கிக்கு இடம் குறிக்கப்பட்டிருந்ததால் அந்த இடத்தில் ஜனங்கள் சமுத்திரம்போல் காணும்படியாக வந்து கூடி விட்டார்கள். திடீரென்று கருக்கல் கட்டி மழை தூரத்தொடங்கி விட்டது. பிறகு வேறு இடம் மாற்றப்பட்டது. அந்த இடம் ஒரு ஆயிரம் பேர்கள் மாத்திரமே கொள்ளக்கூடியதாயிருந்ததால் ஜனங்களுக்கு இடம்போதவில்லை. இதற்கிடையில்மழையும் வலுத்து விட்டது. பிறகு அங்கிருந்து அரை மைலில் தூரமிருக்கும் ஒரு நாடகக் கொட்டகையின் பெயரை வெளிப்படுத்தியதும் பெரிய மழையில் ஜனங்கள் நனைய நனைய ஓடி கொட்டகையில் முன்னதாக இடம் பிடித்துக்கொண்டார்கள். மேடையிலும் கீழும ஜனங்கள் நிரம்பிவிட்டதால் உபன்யாசகரும் தலைவர்களும்கூட உள்ளே நுழைவதற்கு இடம் இல்லாமல் கஷ்டத்துடன் வழி சம்பாதித்து உள்ளே நுழைய நேர்ந்தது. திரு. கனகசபை நாடார் அக்கிராசனம் வகித்து திரு. நாயக்கரை அறிமுகப்படுத்துவதாக இரண்டொரு வார்த்தைகள், சொல்லி அதிகமான ஜனங்கள் இங்கு வந்திருப்பதால் டாக்டர் கொடுத்த அரை மணி நேரத்துடன் தானும் மறுபடி 15 நிமிஷம் கொடுப்பதாகச் சொல்லி 45 நிமிஷத்தில் உபன்யாசத்தை முடித்துவிட வேண்டும் என்று கட்டளையிட்டார். நாயக்கர் பெருத்த ஆரவாரத்திடையில் எழுந்து உடல் நலத்திற்கும் ஓய்வுக்குமாக கொடைக்கானலுக்கு வந்தவன் அருப்புக்கோட்டைக்கு வந்து, தினமும் காலையிலும் மாலையிலும் 2 மணி 3 மணி வீதங்களாக பேசியதாலும் முத்துராமலிங்கபுரத்துக்குப் போகும் வழியில் மோட்டார் கெட்டுப் போனதால்மழையில் நனைந்து கஷ்டப்பட்டதாலும் இது சமயம் சற்று தலைவலியும் மயக்கமாகவும் இளங்காய்ச்சலாகவும் இருப்பதாகவும் டாக்டர் கட்டளைப்படி சிறிது நேரம் மாத்திரந்தான்பேசக்கூடுமென்றும்சொல்லி தனது பிரசங்கத்தை ஆரம்பித்தார். ஜனங்கள் சமுத்திரம்போல் கூடியிருப்பதையும் அவர்கள் நாயக்கர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாய்க்கேட்பதுடன் இடையிடையே ஆரவாரம் செய்வதையும் பார்த்த நாயக்கர் ஒரே அடியாக இரண்டரைமணி நேரம் பேசினார்.

பிறகுதிரு சவுந்திரபாண்டியநாடார் அவர்களும், கந்தசாமி நாடார் அவர்களும் பேசிய பின்னர் அக்கிராசனர் திரு கனகசபை நாடாரவர்கள் முடிவுரையுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

சிவகாசி சேர்மென் திரு ஆறுமுக நாடார் அவர்களும், சென்னை வக்கீல் நடராஜ நாடார் அவர்களும் மற்றும் பல பிரபலஸ்தர்களும், உள்ளூர் அதிகாரிகளும் கூட்டத்திற்கு வந்திருந்து விஷயங்கள் முழுவதும் கவனமாய் கேட்டனர். பலனும் சமீபத்தில் ஒரு சுயமரியாதை மகாநாடாவது, வாலிப மகாநாடாவது கூட்டுவதாய் வாக்களித்தார்கள்.

ஒரு நிருபர்.

பொதுமக்களின் கல்வி விருத்தி அடைதல் வேண்டும். முந்தின சென்சஸ் கணக்கின்படி நம்மவர்களில் கற்றவர்களின் தொகை திருப்திகரமானதாயில்லை. மறு சென்சஸ் எடுக்கப்படும்போது நமது தொகை விருத்தியைப்பெற்றிருக்க வேண்டு மென்பதே என் அவாவாகும். இன்னும் மற்றும் பல துறைகளிலும் நாம் செய்யவேண்டிய வேலைகள் அநேகம் உள்ளன. அவைகளை நாளையத் தினம் எடுத்துரைக்கிறேன்.

நான் என் பிரசங்கத்தை முடிக்கு முன் நமது வாலிபர்களையும் இளைஞர்களையும் தமது தேசசேவைக்கு முன் வரும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். தம் வகுப்பின் மூலம் தமது தேசத்திற்குப் புரியும் தொண்டு மற்றெச் சுதந்திரத்திலும் பெருமையிலும் மேம்பட்டது என்பதை அவர்கள் உணர்ந்தறியவேண்டும். இக்கருத்தைப்பே தான் பல தலைவரும் பல கூட்டங்களிலும் வெளியிடுகின்றனர். இத்தாலி, ஜெர்மனி, பாரசீகம், ருசியா இத்தேசங்களின் சரித்திரத்தினின்றும் எந்தத் தேசத்தில் முற்போக்கிற்கும் அத்தேசத்தின் வாலிபர்கள் முன் வந்து செய்யும் தொண்டே காரணமாகுமென்பது தெளிவாய் விளங்கும்.

நம ஈசுவரப்பற்சியாலும் இறைவன் திருவருளைக்கொண்டும் நமது நோக்கங்களை நாம் நிறைவேறச் செய்வோமாக. தேசிய வாழ்வில் நம் வகுப்பு முன்னணியில் நிற்பதற்குவேண்டிய உதவி புரியவல்ல இச்சங்கத்தை வளரச் செய்வீர்களென்பது எனது கோரிக்கை இவ்விஷயங்களில் உங்களை ஒத்துழைக்கும்படி நான் கேட்டுக் கொள்ளுகிறேன். "ஊருபசி தம் மெய்வருத்தம் பாரார்" என்பதை நாம் நமது கொள்கையாகக்கொண்டு நமது கடமைகளைச் செய்வோமாக.

பார்ப்பனீயம் அற்ற திதி.

ஐயா,

11-7-28 தூத்துக்குடி வாடித் தெரு, அ. சுந்தரபாண்டிய செட்டியார் அவர்கள் தம் தாயாரின் முதல் வருஷ திதியை பார்ப்பனர்களை ஒழித்து தம் குல குருக்களை வைத்து செய்தார்கள்.

தூ. ரும. பேச்சுமுத்து.

குடியர்களை குணமாக்கும்

அற்புத "லிக்கோரின்"

"லிக்கோரினை" தண்ணீர், பால், குழம்பு, மிளகுரசம், காப்பி, டீ, கள், பிராந்தி முதலிய எந்தப் பானத்திலும் கலந்து குடிகாரருக்கும் அபினி தின்போருக்கும் தெரிந்தோ தெரியாமலோ கொடுத்து வருவதில் குடியையும், அபினையும் ஆயுளுள்ளளவும் விட்டுவிடுகிறார்கள். பரீட்சைக்கும பலனுக்கும் உத்தரவாதம். கடந்த 16 வருஷமாக ஏராளமான நற்சாட்சிப் பத்திரம் பெற்றது. பத்தியமே கிடையாது. 15, 20, 25 வருஷக் குடியருக்கு ஒரே புட்டி போதுமானது. தேகத்திற்கு யாதொரு கெடுதியும் செய்வதேயில்லை. தேகத்திற்கு பலத்தை யுண்டாக்கும்.

40 நாள் புட்டி லிக்கோரின் விலை ரூ. 5. தபால் வி. பி. செலவு அணு 9 பிரத்தியேகம்.

ஆங்லோ இன்டியன் டிரக்ஸ் கம்பெனி,
கோயமுத்தூர், தென் இந்தியா.
ANGLO INDIN DRUGS CO.,
Coimbatore. (S. India)

மதனகாமம்.

(புதுச்சேரி பதிப்பு).

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூற்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. அதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மானிட லீலை மர்மங்களும் அடங்கியிருக்கின்றன. இன்ப ரகசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர்பெற்ற பிரஞ்சிந்தியாவே முதன்மைவாய்ந்ததென்பது யாம் கூறாமலே நண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறாது விடுத்தனம். விலை ரூ. 1—0—0.

வஸந்த நிலையம், ரங்கப்பிள்ளை வீதி, புதுச்சேரி.

காமானந்த ரஸாயனம்.

பெயர் பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே.
25 நாள் டப்பி 1-க்கு விலை 1—8—0.
கியாட்லாக் இனாம்.
மானேஜர், சித்த ஔஷதசாலை கம்பெனி,
போஸ்டு முல்லச்சேரி, தென் மலையாளம்.

பிரபலமடைந்த நம்பிக்கையான

சேலம் ஜவுளி வியாபாரிகள்.

கல்யாண காலத்திற்காக ஏராளமான புதிய ஸ்டாக் நயமான விலைகள்.

ஏராளமான புதிய ஸ்டாக். நயமான விலைகள்.

நவீன நாகரீக சேலம் ஜவுளி தினுசுகள்.

எங்களிடம் அசல் பட்டு வஸ்திரங்களும், பலகலர்களிலும் வெள்ளை நூலில் சரிகைப் பேட்டு சரிகை முந்தி வேஷ்டிகளும், துப்பட்டாக்களும், ஜோடிகளும், நார்பட்டு சேலைகளும், வஸ்திரங்களும் மேற்படி தினுசுகளில் சரிகை வேலை செய்த பல கலர் சேலைகளும், விலையுயர்ந்த அசல் பட்டு சரிகை புட்டா சேலைகளும், கொள்ளேகாலம் அசல்பட்டு சரிகை கொட்டடி, சரிகை முலமாங்காய் கமலம்பேட் வஸ்திரங்களும், மைசூர் குண்டஞ்சு ஜோடிகளும் சேலம் துண்டு மடிகளும் ஜமுக்காளங்களும், கார்பட்டில் பலவிதமான கண்ணைக்கவரும்படியான ஜமுக்காளங்களும், சேலம் பனியன்களும், சேலத்தில் தயாராகும்படியான எல்லா ஜவுளி தினுசுகளும் விலை மிக்க சரசமாய்க்கிடைக்கும். ஒரு முறை பரிக்ஷியுங்கள்.

K. N. Kuppusamier, Cloth Merchants,
Commission Agent, Shevapet, Salem. (S. India.)

மதுவின் 'மகிமை'

(திரு.கோ.ந. பொன்னம்பலம் எழுதுவது.)

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

நம் இந்திய தாய் நாட்டிலுள்ள பல ஏழைச் சகோதரர்களும், கனவான்களும் விஷத்தைச் சாப்பிடுவதுபோல் மதுவைக் குடித்து ஆனந்தத்தில் இருக்கிறார்களே! விளக்குப் பிடித்துக்கொண்டு போய் கிணற்றில் விழும் முட்டாள் தனத்தைப் போன்று மதுபானத்தால் நேரிடும்கேட்டை அறிந்தும் மதுவருந்தினால் நம் நாட்டுக்கு வேறு கேடு வேண்டியதில்லை.

மதுவின் ஏலத்திற்கு நம் சகோதரர்கள் தங்களுடைய சுய நலத்திற்கு லாபம் சம்பாதித்து வரலாமென்று—ஒருவருக்கொருவர் நான் முன், நீ முன் என்று போட்டி போட்டுக்கொண்டு மதுவை ஏகத்தில் எடுத்து ஏனையோர்களுக்குப் போதித்து நான் "கள்ளுக்கடை லைசன்சுதாரன்", நான் 'சாராயக்கடை லைசன்சுதாரன்' என்று தங்களுடைய விலாசத்தை தங்களுடைய மதுவின் கடைக்கு முன் தொங்கவிட்டுக்கொண்டும், ஆட்டம் போட்டுக் கொண்டும், ஏலம் போட்டுக் கொண்டும் "இன்றையதினம் சொம்பு ஒன்று மூன்று பைசா," என்று விளம்பரஞ் செய்து ஏழைச் சகோதரர்கள் நாள்முழுதும் வேலை செய்து பெற்ற சொற்பக் கூலியைப் பிடுங்கிப் போட்டுக்கொண்டும் அவனை மதுவின் போதையில் மூழ்கச் செய்து விடுகிறார்கள். அவனோ தன்னுடைய வீட்டுக்குச் சென்றால், அவ்விடத்திலோ தரித்திரம் குடிகொண்டு இருக்கிற பரிதாப நிலைமையில், அவனுடைய தாயோ, மனைவியோ "இதென்ன! இப்பேர்ப்பட்ட அலங்கோலத்தில் வந்திருக்கிறாய்; வயிற்றுப் பாட்டுக்கு என்ன செய்கிறது" என்று கேட்டால் அவனோ போதையினால் புத்தி சுவாதீனத்தில் இல்லாமல் வீட்டில் கலகம், சண்டை, கொலை முதலியவை செய்கிறான். கனவான்களின் குடும்பங்களும், ஏழை சகோதரர்களின் குடும்பங்களும் இந்த மதுவினால் நூற்றில் தொண்ணூற்றொன்பது நாஸ்தி அடைந்து வருகிற விஷயம் குத்தகைதாரருக்கும், மற்றவர்களுக்கும், ஏனையோர்களுக்கும் தெரிந்த விஷயமேயாகும். உதாரணமாக என்னுடைய சொந்த ஊரில் வேளாள வம்சத்தைச் சேர்ந்த ஒருவன், இதுநாள் வரையிலும் யோக்கியனாயும் (மது உட்கொண்டு வந்த போதிலும்) மரியாதையாயும் இருந்த ஒருவன், நான்கு மாதத்திற்கு முன் ஒரு விசேஷ நாளில் தன்னுடைய தாயாரை குடிப்பதற்குப் பணம் கேட்டான். தாயார் இல்லையென்று சொன்னவுடனே தன்னுடைய மகள் கழுத்தில் இருந்த தங்கச்சரட்டட்டிகையை கழற்றிக் கொண்டு போய் மதுவின் குத்தகைதாரருக்குப் போட்டு மதுவை வேண்டியமட்டும் குடித்துவிட்டு தன்னுடைய புத்தி சுவாதீனத்தில் இல்லாமல் தலைகீழாய் வந்து ஆக்குரோஷத்தினால் தாயைக் கொன்றுவிட்டான். என்ன பரிதாபம்! ஐயோ! அவனை விசாரித்து மரணதண்டனைக்கு உத்திரவு செய்து விட்டார்கள். க்ஷேம தசையில் இருந்த அவனுடைய குடும்பம் அவனுடைய குடியாலும் மரணத்தாலும் இப்பொழுது ஈனஸ்திதியில் வந்து விட்டது. என்ன பரிதாபம்! இதற்குக் காரணம் மதுவின் குத்தகைதாரர்தான். இப்பேர்ப்பட்ட காரியங்களைப் பார்த்தும் குத்தகைதாரர்களுக்கு மனம் இரங்கவில்லையே! இந்தப் பாழும் மதுவினால்தான் லாபம் வந்து தன்னுடைய நலம் க்ஷேமம் அடையவேண்டுமோ! என்ன பரிதாபம்! பாபம் இந்த மதுவினால் லாபம் சம்பாதிக்கும் கவர்ன்மெண்டு கூட மனமிரங்கி அனேக கிராமங்களிலும், வழிகளிலும் இருக்கும் மதுக்கடைகளை எடுத்திருக்கிறார்கள். எடுத்திருந்துப்பிரயோஜனமென்ன? "கிணறு வெட்டபூதம் புறப்பட்டகதை போல்" மதுவின் குத்தகைக்காரர்கள் தம்முடைய சுயநலத்திற்காக மது இல்லாத கிராமத்திலும், வழிகளிலும் கொண்டுவந்து ஊருக்குள் தயிர், மோர், பால், எண்ணெய் முதலிய அனேக வஸ்துக்கள் விற்பது போல இந்த பாழும் கள்ளை விற்று கனவான்களையும் ஏழைச் சகோதரர்களையும் பாழ்படுத்தி வருகிறார்கள். இத்திருட்டுத் தனத்தை ஆப்காரி உத்தியோகஸ்தர்கள் கண்டு பிடித்துக் கொண்டால் "நாம் கடவுளை வழுபடுவதற்கு கோவிலுக்கு சென்று அவ்விடத்திலிருக்கும் பார்ப்பனதாகர்களுக்கு சுவாமி பெயரைச் சொல்லி காணிக்கை செலுத்துவது போல" இம்மதுவின் குத்தகைதாரர்கள் ஷை உத்தியோகஸ்தருக்கு பாத காணிக்கை செலுத்தினால், அவர் "வந்த காரியம்ஜெயம் அடைந்து விட்டது; இனி யார்எப்படிப்போனால்என்ன" என்று எண்ணிக் கொண்டு போய்விடுகிறார். அப்பொழுதே குத்தகைக்காரர்களுக்கு குளிர் விட்ட மாதிரி வேண்டிய ஆர்ப்பாட்டங்களுடன் மதுக்குடங்கள் முன்னைவிட ஜாஸ்தியாய் புறப்படுகின்றன. என்ன கூற்று! சில குத்தகைக்காரர்கள் வெளிக்கு மட்டில் தன்னுடைய சுயநலம்கருதாதவர் போல், பொது ஜனங்களுக்கு உழைப்பவர் போல, கதர், தீண்டாமை, மதுவிலக்குகளைப்பற்றி மற்றவர்களுக்குபோதித்து, ரகசியத்தில்வேறு ஒருவர் பேருக்குமதுக்கடைகளை ஏலத்திலெடுத்துநடத்துகிறார்கள். இப்பேர்ப்பட்ட மனிதர்கள் நம் தாய் நாட்டில் இருக்குமளவும் நம் குடும்பங்களிலும், கிராமங்களிலும் சண்டை, கொலை, களவு, கட்சி பிரதிகட்சிகள், தரித்திரம் இருந்து கொண்டேதான் இருக்கும். ஆகவே நாம் இன்னும் ஈனஸ்திதி அடைந்து விடுவோம். ஆகையால் கனவான்களே! ஏழை சகோதர, சகோதரிகளே! இனிமேலாவது மது என்னும் விஷத்தை உண்ணாமல் உங்களுடைய க்ஷேமத்தை அடையும் படிக்கும், குத்தகைதாரர்களுடைய சொற்களை காதில் போட்டுக்காமல் இருப்பீர்களென்றும், குத்தகைதாரர்களும் இனிமேலாவது இந்தப் பாழும் மதுவில் வரும் லாபத்தைபோ, நஷ்டத்தையோ கவனிக்காமல் ஒற்றுமையுடன்ஏலத்தில் எடுக்காமலும் அன்புமிக்க சகோதர சகோதரிகளுக்கும் ஏனையோர்களுக்கும், மற்றவர்களுக்கும் மது என்றும் ஊட்டாமலும்மகாத்மாவினுடைய வாக்கியத்தையும், மதுவிலக்கு, பார்ப்பனியம் ஒழித்தல் முதலியநல்லொழுக்ககாரியங்களையும்உபதேசிக்க வேண்டுமென்றும்நமதுதாய்நாடுக்ஷேமமடையவேண்டுமென்றும் எம்பெருமானை இறைஞ்சுகிறேன்.

"நவசக்தி" முதலியாருக்கு நாராயணசாமியின் முடங்கல்.

சென்னை நவசக்தி ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களுக்கு.

ஐயா,—சென்ற 13-6-28 தேதி வெளியான நவசக்தியில் 'குடி அரசின் குதர்க்கம்' என்ற தலையங்கத்தை ஊன்றிப்படித்ததில், தமிழில் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்து விவாதிக்கும் வன்மை பெற்றில்லாவிட்டாலும், தாங்கள் எழுதியுள்ள அநேக அசம்பாவிதமான உரைகளை எடுத்துக்காட்டுதல் கடமையாகப்படுகின்றது.

"குடி அரசு......எவரையேனும் தாக்கும் வாயிலாகவே தனது செல்வாக்கை நிலைநிறுத்தி வருகிறது" என நிச்சயப்படுத்தி எழுதிய தங்களுக்கு எவரையேனும் போருக்கழைத்து வசை புராணம் பாடிக்கொண்டிருந்தால் தான் 'குடி அரசின்' செல்வாக்கு நிலவும் போலும் என சந்தேகம் தோன்றிய காரணம் என்னை? குடி அரசின் "புனித" இயக்கத்துக்கு இடையூறு செய்யும் அறிவிலிகளை தாக்குவதன் மூலம் 'குடி அரசின்' செல்வாக்கு ஓங்குகிறதென்பதிலும் ஐயமுண்டோ!

"மனிதருக்கு மனிதர் அஞ்சுவது எற்றுக்கு" என சமத்துவம் காட்டி எழுதிய தாங்கள் குறிப்பது எவரை? தகுந்த பதிலிறுக்க முடியாது மழுப்புவது கோழமை அல்ல பெருந்தன்மை என்பது தங்கள் ஆராய்ச்சியின் விளக்கமோ!

"சமயத்தை"ப்பற்றி 'குடி அரசில்' வெளிவரும் கட்டுரைகளிற் பல தங்களுக்கு பிடிக்காவிட்டால் வாளா கிடப்பது தானே; ஏன் கடவுளுக்கும், அடியார்களுக்கும் வக்காலத்து வாங்க வேண்டும்? தங்களுக்கு கடவுளிடமும், கடவுள் நெறியிடமும், அந்நெறியுணர்த்திய அடியார்களிடமும் எவ்வளவுபாத்தியமிருக்கின்றதோ அவ்வளவு பாத்தியம் 'குடி அரசு' ஆசிரியருக்கும் இருக்கும்போது குறை கூறக்கூடாதென கட்டளையிட நுமக்கு என்ன பாத்தியம்?

"சமயத்தின் போல் கண்மூடி வழக்க ஒழுக்கங்கள் அங்கங்கே நாட்டுக்கேற்றவாறு நுழைந்து கிடத்தல் உண்மையே. இவற்றிற்குக் காரணம் யார்? சமயாச்சாரியாரா? பின் வந்தவரா?" எனக் கூவும் தங்களுக்கு, சமயாச்சாரியார் தங்களின் ஆராய்ச்சியால் பெற்ற வல்லமைகொண்டு கண்மூடி வழக்க ஒழுக்கங்களை இனிய தமிழுடன் குழைத்து ஊட்டுவது கண்டு, ஆராய்ச்சியும் பண்டிதத் தன்மையும்வேறு, அறிவு வேறு என அபிப்பிராயப்படுவதில் தப்பில்லையெனத் தெரிந்தும் சமயாச்சாரிகளுக்கு வக்காலத்து வாங்குவது மூடரை கற்றறி மூடர் கொண்டாடிய முறை போலும். 'குடி அரசு'த் தலைவரின் சமய போதனையை இக்காதில் வாங்கி அக்காதின் வழிவிடுத்து பிறவற்றை ஏற்றுக்கொள்கிறார்களென்பது உண்மையானால் ஏன் இவ்வளவு கூச்சல்? தமிழ்க்கலைகளுக்குளங்கிருந்து,வந்து பிடித்ததுஏழரை நாட்டுச்சனி?

'குடி அரசு'த் தலைவருக்கு கம்பன் கவி வளப்பையும், சேக்கிழார் அன்பின் திறத்தையும் உணரும் தவம்,—மறு பிறவி உண்மையானால்—எப்பிறவியிலும கூடாவாறு ஆண்டவனை நாங்களும் வழுத்துகிறோம். ஏனெனில் அவரும் சமயப் போதனை செய்யக் கிளம்பி விடுவாரன்றோ.

'குடி அரசு'த் தலைவரும் தாங்களும் வாதப்போர்—அதுவும் அறமுறையில் — நடத்தி ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் சமயச்சீர்திருத்தமும் ஒரு முடிவுக்கு வந்துவிடுமா என்ன? தங்கள் போன்ற ஆராய்ச்சிக்காரர் பத்துபேர் நின்று எவ்வளவு முட்டுக்கொடுத்தாலும் எத்தகைய சமயக்கட்டுப்பாடுகளும் யாருதவியுமின்றி விரைவில் தானே தகர்ந்துவிடுமென்பது மட்டும் திண்ணம். விவாதத்தில் புராண, சாஸ்திரக் குப்பைகளினின்றும் மேற்கோள் காட்டுமுகத்தான் தங்கள் கட்சிக்குத் ஆக்கம் தேடாது அனுபவமுறையில் விவாதிக்க முற்படின் நேர்மையாகவிருக்கும்.

வி. எஸ். நாராயணசாமி, சிங்கப்பூர்.

"குடி அரசு" "திராவிடன்" பத்திரிகைகளுக்கு நன் கொடை.

சேலம் தாலூகா போர்டு மெம்பர் திருவாளர் கே. சிவப்பெருமாள் பிள்ளை அவர்களின் கனிஷ்ட சகோதரர் சின்னத்தம்பிபிள்ளை அவர்களுக்கு ஆண்குழந்தை பிறந்த விசேடத்தை முன்னிட்டு நடத்திய விசேடத்தில் முற்றிலும் பார்ப்பன புரோகிதத்தை ஒழித்தது மல்லாமல் நம் இயக்கப் பத்திரிகைகளாகிய 'குடி அரசு' 'திராவிடன்' ஆகிய இரு பத்திரிகைகளுக்கு ரூபாய் 2 வீதம் ரூபாய் நான்கு நன்கொடை அளித்தார்கள்.

கே. சுப்பிரமணியம்.

விழுப்புரம் சுயமரியாதைச் சிற்றுண்டி சாலை.

நமது பண்டைத் தண்டமிழ் நாட்டில் தற்சமயம் உலவும்! நமது இயக்கம் விழுப்புரத்தில் போதிய ஊக்கமில்லாதிருந்தும், "நான் பெற்ற இன்பம் வையமெல்லாம் பெறுக" என்ற அரிய வாக்கிற்கிணங்க சில அன்பர்கள் இங்கு பொதுமக் கட்டன்மையை உணர்ந்து, அவர்கள் நலத்திற்காக ஓர் "சுயமரியாதைச் சிற்றுண்டி சாலைக்" ஒன்று ஸ்தாபிக்க முயற்சி செய்து வருகின்றதைக்காண எமது மனம் பூரிக்கின்றது. இச்சிற்றுண்டி சாலைக்காக இத்தாலூக்கா வாசிகள் பலரும் இதில் போதிய ஊக்கமும் ஆதரவும் காட்டி வருவதாகத் தெரிகிறது. "பல துளி பெருவெள்ளம்" என்றவாறு, இன்னும் பல அன்பர்களும் இதற்காக உதவியளிப்பின், நந்தமிழுலகத்திற்கு நன்றி செய்தவர்களாக ஆவர் இச்சாலை, பெரும்பாலும் பார்ப்பனரல்லாதாரியக்கத்திற்கெனவே அமைக்கப்படுவதால் ஒவ்வொரு தமிழறிஞரும் ஆதரவளிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

என். பாலகிருஷ்ண நாயுடு அமைச்சர்,
சன்மார்க்க சங்கம்.

கேம்பிரிட்ஜ் இங்கிலீஷ் கரஸ்பாண்டன்ஸ் டிபார்ட்மெண்டு.

புது ஆரம்பம்! புது ஆரம்பம்!!

சுயாதீனமாய் தொழில், உத்தியோகம் செய்ய வேண்டுமோ? ஆங்கிலம் தெரியாதவர்கள் உலக பிரசித்திபெற்ற 5 மாத இங்லீஷ் கோர்ஸை முடித்து சர்க்காரால் அங்கீகரிக்கப்படும் உயர்தர பட்டங்களுக்கும் படிக்கக் கூடியதுமான கேம்பிரிட்ஜ ஜூனியர், சீனியர், கோர்ஸ்களை வீட்டிலிருந்தபடியே தாங்கள் செய்யும் தொழிலுக்கு யாதொரு இடையூறின்றி படிக்கலாம். ஏராளமான நற்சாக்ஷிப் பத்திரங்கள். 7-வது (III Form) பாஸ் பண்ணினவர்கள் ஜூனியரிலும், 9, 10 (S. S. L. C.) படித்தவர்கள் சீனியர் வகுப்பிலும் எடுக்கப் படுகிறார்கள்.

5 மாத இங்கிலீஷ் முழுக் கோர்ஸ் தபால் மூலம் கற்றுக்கொள்ள ரூ. 5 மாத்திரம் முன் பணம் கட்ட வேண்டும். பிராஸ்பெக்டஸுக்கு ஏற்கனவே படித்த விபரத்தோடு ஸ்டாம்புடன் எழுதவும்.

டைரக்டர்,
கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட், நாகூர்.

இனும்! இனும்!! இனும்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப்பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்.

ஸ்ரீ கொக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்)

இந்த லேஹியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை வாரமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத்தேன் முதலியனவும் உதவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் கிரப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சிரேஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. கீர்த்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான ரணங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஒடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்றதென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ நினம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

மதுரை, இராமனதபுரம் ஜில்லா பார்ப்பனரல்லாத இளைஞர் மகாநாடுகளிலும் இன்னும் அநேக பொருட்காட்சி சாலைகளிலும்,

அநேக டாக்டர்களிடமிருந்தும் நற்சாட்சி பத்திரம் தங்க மேடல்கள் பரிசுபெற்ற

மதுரை. V. K. அன் சன்ஸ், கம்பெனியாரின்

லலன் பிளவர் சோப்,
லர்தூர் சோப்,

ஹார்ட்லி அன்பர்மஸ், டின் பிஸ்கட்ஸ் உபயோகப்படுத்துங்கள்

எல்லா ஷாப்புகளிலும் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

தந்தி விலாசம், "பிஸ்கட்" மதுரை.

V. K. அன் ஸன்ஸ்,
கிழமாசி வீதி, மதுரை.

கடவுளை வணங்க பார்ப்பனத் தரகர் வேண்டுமோ?

'சேலம் மாம்பழம்'

விற்பனைக்கு தயாராகிவிட்டது, விலை சர்சம்.
தினசரி மார்க்கட் நிலவரத்திற்கு என்னுடைய சொந்த பார்வையின்மேல் பொறுக்கி எடுத்து ஜாக்கிறதையாய் பாக் செய்தனுப்பப்படும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.

செடிகள், விதைகள் கேட்லாக் இனும்.

ச. கோ. இ. காதர்மீறு சாயபு,
ஹொட்நர்சரி அண்டு பழவியாபாரம், சேலம்.
தந்தி விலாசம்:— "ஸ்டோர்," சேலம்

இனும்! இனும்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனு இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு ப்புறம்கிசித்திரவேலை செய்யப்பட்ட லிவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன்பேனு இனுமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

இனும்! இனும்!!

நேயர்கள் தங்கள் விலாசம் தெரிவிப்போருக்கு அரும் பாக்கம் வைத்தியம் ஸ்வாமி ஞானனந்தரின் குடும்ப ஆயுர்வேத புத்தகம் இனும்!!

ஞானனந்தர் ஆயுர்வேத ஹோம்
408, தங்கசாலை வீதி, சென்னை.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக்கொள்ளலாம்

(1916 ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுக்கப்படும். ... ... எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இன்ஜினியரிங் ...
..., மதராஸ்.

பொருள் செல்வமை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இதுவரை விற்பனையாகும் ... தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.
திரௌபதை அம்மன் கோவில் வீதி,
புதச்சேரி.

மதனாமிர்தம்.

தாதுவிர்த்திக்கு உயர்ந்த ஹல்வா.

இதில் ஜாலாமிஸ்ரி, ஷகாகுல்மிஸ்ரி, பொன்னம்பர், கஸ்தூரி, சாவுஜபான் முதலிய உயர்ந்த சரக்குகளும், பழங்களும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. பலவித காரணங்களால் உண்டாகிற வெட்டைச்சூடு, நரம்புத் தளர்ச்சி, ஹ்ருதயம் துடித்தல், சுறுசுறுப்புக் குறைவு, போகத்தில் விருப்பமின்மை, அதில் இன்பம் தோன்றாமை, சொப்பன ஸ்கலிதம், துரித ஸ்கலிதம் முதலியவைகளை நீக்கி இந்திரிய வலுவையும், ஆண் தன்மையையும் உண்டாக்கும். ஸ்திரீகட்கு உண்டாகும் சூதகவாய்வுப் போக்கு, பிரசவித்த ஸ்திரீகட்கு உண்டாகும் இரத்த ஒழுக்கு, பலஹீனம் இவைகளை நீக்கி, புதிய பலத்தையும், அழகையும் உண்டாக்கும். ஓர் முறை உபயோகித்துப் பாருங்கள். உயர்ந்த மருந்து. குறைந்த விலை.

15 நாள் சாப்பிடக்கூடிய டப்பி 1-க்கு ரூ. 1-10-0 1 மாதம் சாப்பிடக்கூடிய டப்பி ரூ. 3

மூளைக் கொதிப்பை

சிறு சந்தனாதித் தைலம்

நீக்கி, கண்களுக்கு குளிர்ச்சியையும், மூளைக்கு வலுவையும் உண்டாக்குகிறது. தலைவலி, பார்வைக் குறைவு, வெட்டைச் சூடு இவைகளை நீக்குகிறது. உயர்ந்த மூலிகைகளின் இரசங்கள், வேர்க்கியாழங்கள் முதலியவை சேர்த்து சாஸ்திர முறைப்படி செய்யப் பட்டிருக்கிறது. ஏராளமான நற்சாக்ஷிப் பத்திரங்கள் கிடைத்திருக்கிறது. குறைந்த விலை.

10 அவுன்ஸ் டின் 1-க்கு விலை ரூ. 2. 5 அவுன்ஸ் டின் 1-க்கு விலை ரூ. 1.

மேகப்படை.

மேக விஷ நீரால் உண்டாகும் அரைகடி, பத்து, வண்டுகடி, அரிப்பு, தடிப்பு, தேமல் முதலியவைகளை எங்கள் சர்வபடை நிவாரணி, 2 அல்லது 3 வேளையில் வெளிப் பிரயோகத்தினால் குணப் படுத்துகிறது. நீண்ட நாள் அனுபவமுள்ள உயர்ந்த மருந்து. எரிச்சல் இரணம் இவைகளை உண்டாக்காது. விலை புட்டி 1-க்கு அணா 8.

பண்டிட் சி. வா. ஞானசம்பந்தம்,

சித்தவைத்தியம், ஜீவரட்சாமிர்த இராஜ வைத்தியசாலை, சீர்காழி. S. I. R.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனுமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி, மதராஸ்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA

ரொம்ப ... குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! ... காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. ... ... போடோ ... காமிராவை ... பணம் ... ... போடோவின் அளவு ... காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களும் ... ... மட்டும் ... ரூ. 2—15—0 க்குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

சாண்டியன் ... ... ஜி. டி. மதராஸ்.

3-ம் பக்கத்தொடர்ச்சி,

யால் கொண்டுவந்திருக்கும் இந்து சாஸ்திரம் இன்னொருதரம் பூரி தெட்சணை வாங்க வழிகாட்டும் இந்து சாஸ்திரமா? இந்தூர் மகாராஜாவிற்கு அமெரிக்காப் பெண்ணை விவாகம் செய்துவைக்க எவ்வளவு பணம் பெற்ற இந்து சாஸ்திரம் சங்கராச்சாரியார் கையிலிருந்தது? பார்ப்பனனுடைய ஆதிக்கத்திற்கும் பணம் வருவதற்கும் இந்து சாஸ்திரம் எங்கும் இடம் கொடுக்குமென்றால் எங்களைக் கோபிக்கிறீர்கள். அவர் செய்யும் அக்கிரமங்களில் உங்கள் மனம் செல்லாததற்கு தமிழ் நாடு செய்த குற்றமென்ன?

அன்னிய மதப் பெண்ணால் பிறந்த குழந்தை அபரக் கிரியை செய்ய சாஸ்திரம் இடம் கொடுக்கவில்லை என்றால் தகப்பனில்லாத சங்கரர் அபரக்கிரியைக்கு உத்தரவிட எப்படி அதிகாரம் பெற்றார்? வசிஷ்டர், பாராசரர், வியாசர் இவர்களைப்பெற்ற தாய்மார்கள் ஊர்வசி, புலச்சி, செம்படசசி யல்லவா? இவர்கள் எந்தப் பிராமண ரிஷியின் மதத்தைச் சேர்ந்தவர்கள்? இவர்களை இந்துமதம் எப்படித்தள்ளும்? இவர்கள் இல்லையேல் சங்கரர் மதமேது? ரிஷ்யஸிருங்கருக்குத் தாய் மான்; ஜம்புகருக்குத் தாய் நரி; வால்மீகிக்குத் தாய் புற்றென்றும் பாம்பென்றும் சொல்வர்; அகஸ்தியருக்குத் தாய் கலசம்; கௌதமருக்குத்தாய்முயல்; இவர்களுக்குத்தாய் சிறப்பில்லாவிட்டாலும்இவர்கள்ஸ்மிருதிகருத்தாக்களல்லவா? மானிடப்பிறவியல்லாத பெண் மிருகங்களிடமும் அஃறிணை பொருள்களிடமும் பிறந்த இந்த ரிஷிகளுக்கு வார்சுகளால் திதியும் செய்யப்படுகிறதே. இதை எந்த இந்துசாஸ்திரம் மறுக்கிறது? ராமாயணமும், பாரதமும், பெரிய இதிகாசமென்கிறோம். சம்மத வயதுச் சட்டத்தைக்கண்டிக்க "ராமர் ருதுமதி விவாகம் செய்து கொள்ளவில்லை, அவரைப்போலவே நாமும் நடக்கவேண்டும்" என்று சாஸ்திரிகள் பிரசங்கமும் செய்கிறார்கள். தகப்பனைப் போன்ற அன்பு காட்டின ஜடாயுவிற்கு ராமரும், தாசி மகனான விதுரனுக்குத் தருமரும் அபரக்கிரியை செய்தார்களே. அவர்களை இந்துசாஸ்திரத்திலிருந்து யார் பிரித்தார்கள்? மாரனேர் நம்பிக்குப் பெரிய நம்பி யென்னும் உத்தம பிராமணர் உத்தரக்கிரியை யாகிய பிரம்மமேத சம்ஸ்காரம் செய்தார். இதைக்கேட்ட பிராமணர்களும் சங்கித்திருக்க உடையவரான ராமானுஜாச்சாரியார் குருவான பெரிய நம்பியை வணங்கி "சுவாமீ! தாங்கள் மாரநேர் நம்பிக்குச் செய்த அபரக்கிரியை ஞாயமா? எல்லாரும் சங்கிக்கிறார்கள்" என்று வினவ, பெரிய நம்பிநகைத்து, ராமானுஜாச்சாரியாரைப் பார்த்து "ஜீயரே! நான், வரம்பை அழித்து விட்டதாகச்சொல்ல வந்தீரோ? விருத்தாச்சாரமும், ஸ்வரூபமுமிருக்கும்படியை நோக்கி யோசிக்க வேண்டுவதில்லையோ? இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த பெருமாள் சுகவம்சத்தில் வந்து தசரத அபிமானுந்தர் பூதரான ஜடாயுவிற்கு புத்ரக்ருத்யஞ் செய்தருளியதும், விதுராழ்வானுக்குப் பாண்டுவின் புத்திரரான தருமர் புத்திர கிருத்தியம் செய்ததும் அறியீரா?" என்றார். பெரிய நம்பியின் உத்கிருஷ்டமான திரு உள்ளக் குறிப்பை அறிந்த அகில பிராமணர்கள் கொண்டிருந்த மதிமயக்கத்தைஉடையவர்போக்கினார் என்னும் இந்துசாஸ்திரங்களை எங்கு தள்ளுவது? சூரிய கள்ளர்குடி மரபிற்குத்தலைவனான நீலன் மகன் திருமங்கையாழ்வார் ஆற்றிலும்அறுதியாயும் போகும் பிரேதங்களுக்கெல்லாம் தாமே கருமாதி செய்யவும் மோக்ஷம் கொடுக்கவும் பெருமாளால் வரம் பெற்றாரே. அந்தப் பெருமாள் சீமைப்பெருமாளா? இந்து சாஸ்திரப் பெருமாளா? 'இந்துமதத்தின் பெரு நோக்கங்களையும்' எல்லாவற்றையும் 'சமரசமாகப் பார்க்கும்' தன்மைகளையும் மறைத்து கருமாந்திரத்திலும் கலியாணத்திலும் பாப்பானுக்கே கொடுக்கவேண்டுமென்கிறசுயநலத்திற்காக சாஸ்திர வித்தியாசங்களைச் செய்து எதற்கும் இந்து சாஸ்திரமென்று கொண்டுவந்துபுகுத்தும்இந்து சாஸ்திரம் சங்கரர் சாஸ்திரமாகவிருந்தாலும் ஒழியவேண்டுமென்றே "குடி அரசு" சொல்லுகிறதே ஒழிய ஆதி சங்கரருடைய பிரம்மசூத்திர வியாக்கியானத்தையோ வேதத்தத்துவமாதியவைகளையோ "குடி அரசு" குற்றம் சொல்லாது.

போட்டோ ஆல்பம்.

நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ண ஏஜன்சி, தபால் பெட்டி 119 மதராஸ்.

சில மாதங்களுக்குள்

11,000 பிரதிகளும் விற்பனையாகிவிட்டன!

நாலாம் பதிப்பும்

இன்னும் அநேக பக்கங்களுடனும் அழகிய அநேக ஆப்டோன் பிளாக்குகளுடனும் வெளி வந்துவிட்டது!!

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

குடும்பத்துக்கோர் பொக்கிஷம்.

ஒருவர் வாங்கிப் படித்தால் அவர் தம நண்பர்கள் எல்லோரையும் வாங்கும்படி தூண்டுகிறார். எனவே இப்புத்தகத்திற்கு உள்ள மதிப்பை நாங்கள் சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம்.

இல்வாழ்வை நல்வாழ்வாக

நடத்த உத்தேசிக்கும் ஸ்திரீ புருஷர்கள் கையில் இந்நூலின் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும்.

இதன் விலை ரூ. 2.

ஒவ்வொரு ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரியிடமும் கிடைக்கும். போலி புஸ்தகங்களை வாங்கி ஏமாறாதீர்கள். புஸ்தகத்தின் பேரில் "வாஸன் புஸ்தகசாலை" என்ற பெயர் இருக்கின்றதாவென்று பார்த்து வாங்குங்கள். எமது விலாசம்:—

வாஸன் புஸ்தகசாலை,

244 தங்கசாலை வீதி, தபாற் பெட்டி 119, மதராஸ்.

பரம்பரை வைத்திய சந்ததியிலுதித்தவர்!
பழநியில் கீர்த்திவாய்ந்த வைத்திய ஆசிரியர்!!

ஐந்து தலைமுறையாய் அனுபவமுள்ளதும், மஹானின் அனுக்கிரகம் பெற்றதுமான பெரிய முறைகளால் தயாரித்த சிறந்த ஔஷதங்கள் எங்களிடத்தில்தான் கிடைக்கும். கர்ம விறாதிகளைக் கண்டிப்பது எது? ஆயிரக்கணக்கான குஷ்டரோகிகளை குணமாக்கின பழநி சி. எம். சாமி.

குருதாம்பர பஸபம் ஒன்று தான்.

இது அபூர்வ சத்தி வாய்ந்தது. தீராத நாட்பட்ட தீமிர், குஷ்டம், மதமதப்பு, குறைநோய், வீக்கம், பெரு வயறு, மகோதரம், ஆனைக்கால், பவுத்திரம், கண்டமாலை, பீனிசம், சோரிகள், பத்துகள், தடிப்புகள், கபால நீர் பிளவை, ஆராத குளிப்புண் முதலிய சகல வியாதிகளையும் நீங்கும் அனுபவத்தில் கைகண்டது.

100-வேளை பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 50. 50-வேளை ரூ. 25.

ஏழைகளுக்கு பாதி விலை.

நற்சாட்சியை கவனியுங்கள்:—

ஐயா, எனக்கு வயது 35. இரண்டு வருஷகாலமாய் குஷ்ட வியாதி வலது கால் பெருவிரலில் குளிப்புண், குண்டி பின்புரத்தில் கருமேகம், முதுகில் வெள்ளைப்புள்ளிகள், வலது கையிலும் இடது கையிலும் பத்துகள், திரேகத்தில் மதமதப்பு, சுரணையில்லாதிருத்தல் இவைகளினால் மிகவும் கஷ்டப்பட்டு மதராஸ், ராயபுரம் ஆஸ்பத்திரியில் 17 ஊசிகள்வரை ஏற்றியும் இன்னும் அநேக இங்கிலீஷ் மருந்துகள் சாப்பிட்டும் குணமடையாமல் தங்கள் மருந்துகளின் குணங்களையும், பிரக்யாதியையும் கேள்விப்பட்டு நேரில் வந்து 50 வேளை குருதாம்பர பஸ்பமும் அதற்கு அனுபானமும் பெற்று சாப்பிட்டதில் குணமாய் இருக்கிறது.

கோவிந்த நாயர், குடுவாயூர், பாலக்காடு தாலூக்கா.

குருதாம்பர பஸ்பம் தருவித்து 60 வயதுள்ள ஸ்திரீக்கு மேகநீரினால் முழங்கால், பாதம், கணுக்கால் இவைகளில் வீக்கமும், உபத்திரவமுமிருந்து அதற்கு 10-வேளை கொடுத்ததில் பூரண சௌக்கியமாயிற்று.

எஸ். கே. நாராயணசாமி நாயுடு,
எப். டி. தென்னை, காளிபாம்பாடி போஸ்டு, வேலூர் தாலூகா.

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய அபீஸர்களின் நற்சாட்சிகளையும் கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர். C. மலையப்பசாமி. நித்தியானந்தவைத்திய சாலை, பழனி

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி, 43 அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!
புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதியிருக்கிறார்.

முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாலன் புஸ்தகசாலை,
97, அன்னுபிள்ளைத் தெரு, மதராஸ்.

டேபில் டைம்பீஸ் இனாம் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு பேஜையின் பேரில்வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டைம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி மதராஸ்.

முன் விலை ரூ. 14. இப்பொழுது 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்.



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி

சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12; ஷை கல்விழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பேன்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபர்ஸ் 1 ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரிரைகள் 12; சென்ட் புட்டி 1; தேசீய டிரான்ஸபர் படங்கள் 12; அழகிய பலரக சேப்டி பின்கள் 21 ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பேனி தபால் பெட்டி 113, மதராஸ்.

ரத்தன் மிஸ்ரி அல்வா

நீரான இந்திரியத்தை கெட்டி செய்யும். காது விருத்தியாகும்: ஸ்திரீ சம்போகம் சுகங்கொடுக்கும். சொர்பன ஸ்கலிதம், மூத்திரத்தில் பொட்டு பொட்டாய் வீரியம் போகிறது, ஸ்திரியைக்கண்டவுடன் வீரியம் ஸ்கலிதமாய் சம்போகத்தின்பேரில் பிரியம் இல்லாமல் போகிறது, துர் அப்பியாசத்தினால் பும்ஸத்துவம் இல்லாமல் இருக்கிறது ஆகிய அநேக விதமான மேக வியாதிகள் முதலானவைகளைப் போக்கடித்துவிடும்.

கிரயம் டின் ஒன்றுக்கு ரூ. 2—8—0.

மேல்கண்ட மருந்துகள் ஈரோடு, கோயமுத்தூர், பொள்ளாச்சி, திருப்பூர், கிருஷ்ணகிரி, திருப்பூர், தருமபுரி, இந்த இடங்களில் கிடைக்கும்.

ஆஞ்சநேய ஜோதிஷாலயம்,
நகர்த்து பேட்டை,
பெங்களூர் சிட்டி.

அசோகி.

ஸ்திரீகளுக்கு உயரிய ஓர் திவ்ய ஔஷதம்.

ஸ்திரீகளுக்கு கர்ப்ப ஆசயத்தில் உண்டாகும் கெடுதல்களாகிய சிறுவயதில் ருதுகம் நின்றுபோதல், காலக்கிரமம் தவறி ஆதல், குறைவாகக் காணுதல், அதிகம் காணுதல், சூதக வயற்றுவலி, பெரும்பாடு ஆகிய சகல கர்ப்பக் குற்றங்களையும் 'அசோகி' என்னும் திவ்ய ஔஷதம் பூரணமாகக் குணப்படுத்தி தேக ஆரோக்கியத்தையும் சந்தான விருத்தியையும தருவதில் நிகரற்றது. கர்ப்பகாலத்தில் உபயோகிப்பதால் சுகப்பிரசவம் உண்டாகிறது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2. தபால் செலவு வேறு.

டைரக்டர், பாரத டிஸ்பென்ஸரி,
ரங்கே கவுண்டன் வீதி, கோயமுத்தூர்.

பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னாடிஸ மெஸ்மரிஸ மென்னும்

மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வசப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, சூளை போஸ்டு, மதராஸ்,

வியாபாரிகளே! கவனியுங்கள்!!

வியாபாரத்தின் நிலைமையை அடிக்கடி அறிந்து லாபகரமான வழியைத்தெரிந்து அவ்வழியில் தொழிலை நடத்துவதினாலேயே வியாபாரம் ஓங்கி வளரும்

லாபகரமான வழியை அறிவதெப்படி?

உங்கள் தொழிலுக்குத் தகுந்தாப்போல் சரியான கணக்குகள் வையுங்கள்

உங்களுடைய கணக்கு முறைகளை ஒழுங்காக வைத்துக்கொள்வதற்காக

வர்த்தகக் கணித நூல்

என்ற புதிதாக வெளிவந்த புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்

ஒரு தரம் பார்த்தவுடனேயே நமக்கு வரவேண்டிய தெவ்வளவு, நாம் கொடுக்க வேண்டியதெவ்வளவு, லாப நஷ்டமெவ்வளவு, முதல் தொகை எவ்வளவு வியாபாரத்தில் போடப்பட்டிருக்கிறது, எவ்விதமான தொழில் லாபத்தைக்கொடுக்கிறது என்று சுலபமாகப் பிறருடைய உதவியில்லாமலே ஆங்கிலேயர் எப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ அதே முறையில்தான் ஷை புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், எல்லா வியாபாரிகளும் எவ்விதமான தொழிலுக்கும் ஷை புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படி கணக்குகள் வைத்துக்கொள்ளலாம். படிப்பதற்குக் கஷ்டமில்லாதபடி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ 2

வாசன் புஸ்தகசாலை. நெ. 244, தங்கசாலை வீதி, தபாற் பெட்டி நெ. 119, சென்னை

திருப்பூர் ஸ்பெஷல் கார்டிகன் பனியன்ஸ்.

தமிழ் நாட்டு இளைஞர்களால் தயார் செய்யப்பட்டிருக்கிறது.

20 இஞ்சு முதல் 40 இஞ்சு வரை உள்ள எல்லா தினுசுகளும் கிடைக்கும்,

விலை 32 இஞ்சு 2 நூல் பூரா சைஸ் டஜன் 1 க்கு 3—8—0,

,, ஷை 3 நூல் Thick Fancy 5—0—0.

இவைகளைத் தவிர எங்களிடம் பெரிய வலை, சின்ன வலை, கோகர்ஜான் வலை, திகபிக், நின்பிக், ராயல் ரிக், ராயல் ரிப், பிளேன் முதலான பனியன்களும் இந்தியாவிலுள்ள எல்லா பனியன்களையும் விட விலை சலீசாகவே கிடைக்கும்.

வேண்டியவர்கள் நேரே எங்கட்கு ஆர்டர் செய்யவும். விலை விபர ஜாபிதா இனாம்,

The General Knitting Factory,
Tirupur, (S, India.)

ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணாமல் போனதைக் கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைகிக் இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதராஸ்.

பெண்கள்

ஆவலாய்விரும்பக் கூடியது! உயர்ந்த மல்லில், பச்சை, புளூ, வயலெட், ஆரஞ்சி, கருப்பு, கெம்பு ஸ்நங்கலர்கள். கெட்டிச்சாயம், கரையிலும் முந்தியிலும் பூவேலைமானமுள்ள நூதனமாகத் தயார் செய்த புடவை. 18 மு. X 48 இஞ்சு புடவை ரூ. 4—8—0. ஷை பூவேலைமானமில்லாதது ரூ. 4—4—0. ஷை உடல் சிகப்பு அல்லது கருப்பு பல மாதிரி புள்ளிகள் போட்ட சுன்னடி புடவை ரூ. 4—8—0. புதிய கேட்லாக் இனாம்!

The Madura Oriental Trading Co:
Laxmi Colth Store, MADURA.

ஆநந்த குணபோதினி.

மூன்றாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இதுவரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளையொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000-சந்தாதார்களுள்ளது. வருட சந்தா ரூ. 1. வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனாம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

அறிக்கை.

எங்களிடம் பிரான்ஸ் நல்ல ரங்குள்ள வெள்ளி ஜரிகை மார்க்குகளும், பாம்பே குவாலிட்டி மேல் கண்ட மார்க்குகளும், சூரத் மார்க்குகளும் கைவசமிருக்கிறது. உள்ளூர் ஜவுளி தினுசுகளும் இருக்கிறது. விலைஜாப்தா வேண்டியவர் எழுதினால் அனுப்பித்தருகிறோம்,

சி. லிங்கி செட்டி,
எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம்,
கோயமுத்தூர்.

15 இனாம் சாமானுடன் கொடுக்கப்படும்.

எங்களின் தாரா வீவர் 18 காரட் ரோல்ட்டு கோல்டு பாக்கெட் கடியாரம் ஆர்டர் செய்பவர்களுக்கு மேல் கண்ட 15 இனாம் சாமான் கொடுக்கப்படும். இனாம்களுடன் ரூ. 4—8—0. தி. பான்ஸி வாட்சு ஸ்டோர்ஸ், ஜி. டி. மதராஸ்.

[illegible]